ஜனவிநோதினி.

இல. 6.] ஜூன்மீ 1875. [புஸ்த. VI.

முத்துக்குளித்தல்.

எக்காலத்திலும் முத்துக்களின் விலை அவைகளின் குணத்துக்கும் அழகுக்கும் தக்கபடி சற்றேறக்குறைய ஒரே நிதானமாயிருக்கிறது. முக்கியமாய் ஆசியாகண்டத்தைச்சேர்ந்த கீழ்த்தேசங்களில் சிறந்தமுத்துக்கள் உண்டு; அப்படியே அவைகளுடைய விலையும் மேலாயிருக்கிறது. அமெரிக்காகண்டத்தின் சிலபாகங்களில் முத்துக்களினால் திவ்வியமான ஹாரங்கள்முதலியன செய்து கழுத்திலும் புஜங்களிலும் அணிந்துகொள்ளுகிறார்கள். அவ்விடங்களில் முத்துக்கள் விசேஷமாய் அகப்படுகிறபடியால், அந்த ஜனங்கள் முத்துநகைகளை நகைகளாக நினைக்கிறதேயில்லை. பிறநாட்டானொருவன் அங்கே போயிருந்தபோது ஒரு மட்பாத்திரத்தைக் கொடுத்து அதற்குப் பதிலாக நாலுகோவை முத்துவாங்கிக்கொண்டானாம்; அவ்விடத்தவர்கள் முத்தை அலட்சியமாக எண்ணுகிறார்களென்பதற்கு இதைவிட வேறு திர்ஷ்டாந்தம் வேண்டுமோ?

முத்துக்கள் (Oyster Mussel) ஆயுஸ்டர் மஸ்ஸெல் முதலிய ஜலஜந்துக்களுடைய உடலிலாவது ஓடுகளிலாவது அகப்படும். முத்து உண்டாகிறவிதம் எப்படியெனில், அந்த ஜந்துக்களுடைய மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் நடுவே ஒரு பொடிமணல் பற்றிக்கொண்டு நமைச்சல் எடுக்கிறது; அதைச் சகிக்கமாட்டாமல் புரளுகையில் சுண்ணாம்புத்தன்மையுள்ள ஒருவித நீர் பொசிந்து அதனால் அந்த மணல் மூடப்படுகிறது; இதுவே கடைசியில் முத்தாய்விடுகிறது. உடலிலிருந்து முட்டை வெளிப்படாமல் அங்கேயே தங்கிவிட்டால் அதுவும் மேற்சொன்னபடி உடலிலிருந்து பொசியும் நீரினால் மூடப்பட்டு முத்தாக மாறிவிடுமென்கிறார்கள். இது இயற்கையாய் முத்து உற்பத்தியாகும் வழி; சீனாதேசத்தார் செயற்கைஉபாயத்தினாலும் முத்துசம்பாதிக்கிறார்கள். நமைச்சல் உண்டாக்கத்தக்க அணுக்களை அந்தப் பூச்சி ஓட்டுக்குள் செலுத்தி அத

ஞால் ஜந்துக்களுக்கு நோவு உண்டாக்குகிறுர்கள்; அது வேறொருவழியிலும் அதை நிவிர்த்திபண்ணிக்கொள்ளமாட்டாமல் முன்போலவே செய்து நோவைத் தீர்த்துக்கொள்ளுகின்றது. இம்மாதிரியாய்க் கஷ்டப்பட்டு முத்துசம்பாதித்து அவர்கள் வெகு லாபமடைகிறுர்கள்.

பக்குவமாவதற்கு எவ்வளவுகாலம் பிடிக்கிறதோ, முத்தின் பரிமாணமும் அவ்வளவு அதிகமாயிருக்கும்; நமைச்சலுக்குத்தக்கபடியும் பரிமாணம் வேறுபடுகிறதுண்டு. உஷ்ணதேசங்களில் அகப்படும் முத்துக்கள் நேர்த்தியாயும் பெரியவைகளாயுமிருக்கின்றன; குளிர்ச்சியான தேசங்களில் சிறியமுத்துக்கள் அநேகம் காணப்பட்டபோதிலும், பெரியமுத்துக்கள் கிடைக்கிறது அரிது. ஆகையால் சீதோஷ்ண விசேஷங்களினுலும் பரிமாணம் ஒருவாறு ஏற்படுகிறதென்று சொல்லலாம்.

முத்தெடுப்பதற்காகச் சமுத்திரத்திலே மூழ்குகிறவர்கள் சிறுவயதுமுதல் ஜலத்தோடே விசேஷமாய்ப் பயின்று நிலத்திலேபோல நீரிலும் இயலத்தக்க சாமர்த்தியமுடையவர்கள். இலங்கையில் முத்தெடுப்போர் படகுகளில் கூட்டம்கூட்டமாகப் போவார்கள். அவர்கள் வெகு முரட்டுத்தனத்தோடு நிர்வாணமாய் ஜலத்தில் மூழ்கி, சாதாரணமாய் 24–அடி ஆழத்துக்குக் குறையாமலும், 60–அடி ஆழத்துக்கு உயராமலும் போய் அங்கே நூறு நூற்றிருபது விநாடிகாலமிருப்பார்கள்; அரிதாய் சிலர் ஐந்துநிமிஷம் அல்லது 300விநாடிவரைக்குங்கூட இருப்பார்களாம். அவர்கள் நீரில் புகும்விதம்: ஒரு பெரிய கருங்கல்லின் நுனியில் துவாரம் விட்டுக் கயிறுகோத்து, அக்கயிற்றை வலதுகால்விரலினுல் பிடித்துக்கொண்டு இடதுகாலில் வலையை மாட்டிக்கொள்ளுகிறுர்கள். இவ்வளவு ஆயத்தத்தோடு இறங்குஞ்சமயத்தில் படகிலிருந்து விடப்படும் கயிற்றை இரண்டுகைகளினுலும் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு ஜலத்திற்குள் போகிறுர்கள்; கீழே தொங்குங்கல் அப்போது அவர்களை எளிதாய் அமிழ்த்தும். அடியிற்போய்ச் சேர்ந்தபிறகு கல்லோடு கட்டியிருக்கும் கயிற்றை விட்டுவிட்டு முத்துச்சிப்பிகளைப் பொறுக்கி வலையில் போட்டுக்கொண்டு மேலேவரச் சித்தமாயிருக்கும்போது தாங்கள் பிடித்துக்கொண்டிருக்குங் கயிற்றை ஆட்டி, படகிலுள்ளோருக்குத் தெரிவிப்பார்கள். அப்பொழுது படகிலுள்ளோரும் கயிற்றைத் தூக்கி அவர்களை மேலே கொண்டு வந்துவிடுவார்கள். இப்படிச் சிரமப்படுகிறவர்களுக்கு ஒருவித அபாயமுமுண்டு. அதென்னவெனில், எங்கே எங்கேயென்று இவர்கள்மேல் ஆவலோடு பல்லைத்திறந்து காத்துக்கொண்டிருக்கிற ஒருவகை மீன்களுண்டு; அவைகளினின்றுந் தப்புவது எளிதல்ல. கூரான சிறுதடியினுல் வாயைக் குத்திவிட்டு அதனுல் இவைகள் வருத்தப்

பட்டுக்கொண்டிருக்கும்போது நீர்குளிப்போர் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு வந்துவிடுவது வழக்கம். மணலைக்கலக்கித் தூசியினால் பார்வையைக் கெடுத்து அந்தச் சமயத்தில் தப்பித்துக்கொள்வதும் உண்டு.

எளிதில் வாங்கக்கூடாமல் பாறையோடு பாறையாய் ஒட்டிக்கொண்டிருக்கும் சிப்பிகளை எடுப்பதற்காக சிலர் ஒருவித நீண்ட கத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியிலே கொண்டுவந்த பிறகு அவைகளைப் பூமியில் பள்ளம்வெட்டி உலரவைத்து, செம்மையாய் உலர்ந்தபிறகு உடைத்து முத்தெடுப்பார்கள். முத்து அந்த ஜந்துக்களின் உடலில் சிக்கிக்கொண்டிருக்கிறபட்சத்தில் அவைகளைக் கொதிப்பித்து முத்தெடுப்பார்கள்.

——————

வீண்பெருமையையும் திருப்தியையும் பற்றிய கதை.

முற்காலத்தில் பார்ஸீக தேசத்துக்குப் பிரதான பட்டணமாயிருந்த (Ispahan) இஸ்பஹான் என்னும் நகரத்தில் ஆமத் என்னும் தையற்காரன் ஒருவனிருந்தான். அவன் நன்னடக்கையும் இடைவிடாமுயற்சியுமுள்ளவன்; பேராசையென்கிற பைத்தியம்பிடித்து அலையாமல் தனது தேகசிரமத்தினால் என்ன கிடைக்கிறதோ அதைக்கொண்டு திருப்தி அடைந்து உலகநிந்தைக்கு ஆளாகாதபடிக்கு நாணயமாய்ப் பிழைத்து காலத்தைக் கழிப்போமென்ற மனமுள்ளவனாயிருந்தான். அந்த நல்ல எண்ணம் நிறைவேறவொட்டாமல் அவன் பெண்சாதி அதற்கு இடையூறாக நின்றாள். மிகவும் மேன்மையான அழகு பொருந்திய ஷித்தாரா என்னும் அந்தப் பெண் அவன் தையல்வேலை செய்கிறவனென்று தெரிந்து பூரணசம்மதியோடு அவனை மணம்புரிந்திருந்தும், அவன் அற்ப வேலை செய்துவருவது அவளுக்குச் சுத்தமாய் இஷ்டமில்லை; ஆகையால் மிக்க ஐசுவரியமும் பெரிய அந்தஸ்தும் சம்பாதிக்கவேண்டியது அவசியமென்று தன் புருஷனுக்குக் காட்டி, அவள் அதற்குவேண்டிய உபாயங்களையும் அவனுக்கு அடிக்கடி போதித்துவருவாள். அவனும் அவள்மேல் ஆசையுள்ளவனாகையாலே, அவள் சொல்லுவதற்குக் குறுக்குச்சொல்ல மனமில்லாமல் அவள் என்னசொன்னபோதிலும் சிரித்துத் தலையாட்டுவான். அவள்மாத்திரம் பணம் பணம் என்கிற பேச்சைவிடாமல் எப்போதும் துராசைபிடித்தவளாயிருந்தாள்.

இப்படியிருக்க, அவள் ஒருநாள் சாயங்காலம் ஒரு பெண்பிள்ளை கண்ணைப் பறிக்கும்படியான ஆபரணங்கள் அணிந்து திவ்வியமான ஆடை உடுத்து முன் சேவகரும் பின்சேவகருமாய்ச் சவாரிசெய்துவருவதைக் கண்டாள். தனக்கும் அம்மாதிரியான உயர்ந்தபதவி கிடைத்துத் தானும் அப்படியே ஜம்பமாயிருக்கவேண்டுமென்கிற ஆசை அவளுக்கு வெகுநாளாய் உண்டாயிருந்தபடியால், அந்தப்பெண் யாரென்று ஆவலோடு விசாரித்து, அவள் ராஜஜோதிஷனுடைய பெண்

சாதியென்று தெரிந்துகொண்டு வீட்டுக்குவந்தாள். வழக்கம்போல புருஷனைக் கண்டால் சிரித்தமுகமாயிராமல் அன்றைக்கு அவனைக் கண்டவுடனே மூஞ்சியை சிடுசிடுவென்று வைத்துககொண்டு, அவன் எவ்வளவு நல்வார்த்தைசொல்லியும் ஒரு பேச்சுகூடப் பேசாமல் சிலநாழிகைபரியந்தம் சும்மாவிருந்து, கடைசியில் அவனைப்பார்த்து இனியபேச்சுகள் சும்மா பேசுவதில் என்ன உபயோகம்? வாய்க்குக் கேடுதானே; என்னிடத்தில் உன்னுற அன்பிருந்தால் அதற்கு அடையாளமெங்கே என்றாள். அதற்கவன்; நீ என்ன அடையாளம் வேணுமென்றாய்; நான் என்னகொடுக்கமாட்டேனென்றேன் என்று சொல்ல, அவள் தையல் வேலையை விட்டுவிடு; அந்த அற்பவேலையினால் என்னலாபம் கிடைக்கிறது? உடனே ஜோதிஷனாகிவிடு; உனக்குப் பணம் விஸ்தாரமாய் அகப்படும்; நானும் சௌக்கியமாய் வாழ்வேன் என்றாள். புருஷன், ஜோதிஷசாஸ்திரிக்கு எவ்வளவோ வித்தையும் திறமையும் வேண்டியதாயிற்றே; நிரட்சரகுட்சியாகிய நான் என்னவாய் ஜோதிஷன் ஆவேன் என்று தடுத்துச் சொன்னதின்பேரில், அதெல்லாம் எனக்குத் தெரியாது; நீ ஜோதிஷன் ஆகாவிடில் நாளைக்கு நான் உன்னைவிட்டுப் பிரிந்தோடிப்போவேன் என்று பயமுறுத்தினாள்.

அவள் அப்படிப் பிடிவாதம் பிடிக்கிறது தகாதென்று புருஷன் நல்லதனமாய் பலவாறு சொல்லியும், செவிடன்காதில் சங்கு ஊதினதுபோல் பயன்படாமற் போயிற்று. ராஜஜோதிஷன் பெண்சாதி நகைகள் பூட்டிக்கொண்டிருப்பதும், வேலைக்காரர்கள் வைத்துக்கொண்டிருப்பதும் அவளுடைய மனதில் நன்றாய்ப் பதிந்துபோயிற்று; அவளுக்கு அதுதவிர வேறு ஞாபகம் கிடையாது; அன்றிரவெல்லாம் அப்படிக் கனவுகாணுவதிலேயே கழிந்துபோயிற்று. மறுநாட்காலமே எழுந்திருந்தவுடனே தன் புருஷன் தன் இஷ்டப்படி நடக்கச் சம்மதியாமற்போனால் தான் வீட்டைவிட்டோடிப்போவதாகக் கூச்சலிட்டாள். தையற்காரன் என்ன செய்வன் பாபம்! அவ்வளவு அழகான பெண்சாதியை விட்டுவிடவும் மனம் வரவில்லை, ஜோதிஷமும் தெரியாது; ஆகிலும் ஒருகை பார்ப்போமென்று அப்படியே ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டு தனக்குள்ள அற்ப ஆஸ்தியையும் விற்றுப் போட்டு, தேவையான ஜோதிஷபுஸ்தகங்கள் வாங்கிக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டுத் தெருவேபோய்: நான் ஜோதிஷன், நான் ஜோதிஷன்; எனக்குக் கிரகங்கள்முதலானவை தெரியும்; நடந்த சங்கதி, நடக்கப்போகிற சங்கதி யாவும் நான் சொல்லமாட்டுவேன் என்று எல்லோருக்கும் தெரியும்படியாக அறிக்கையிட்டான். ஊரார் எல்லாருக்கும் ஆமட் என்பவன் தையற்காரனென்று நன்றாய்த் தெரியும்; ஆகையாலே அவன் ஜோதிஷனென்று கூச்சலிட்டுக்கொண்டுபோவதைக் கண்டு அநேகர் ஆச்சரியமடைந்து, அவனருகே வந்து ஒருவன் அவனைப் பார்த்து உனக்கென்ன பைத்தியம் பிடித்ததாவென்றும், ஒருவன் தலைகுனிந்து வேலைசெய்வதை விட்டு ஆகாயத்தைப்பார்க்கத் தலைப்பட்டையாவென்றும் இப்படி நானாவிதமாய் அவனைப் பரிகாசம்பண்ணத்தொடங்கினார்கள். தன்னுடைய அழகான பெண்சாதிக்குத் திருப்திகரமாய் எப்படிப்பட்ட காரியத்தையும் செய்யத்துணிந்த அந்தத் தையற்காரன் யார் என்னசொன்னாலும் சொல்லட்டுமென்று சும்மாவிருந்தான்.

அரசனுடைய தனாதிபதி மிகவும் விலையுயர்ந்த ஒரு மாணிக்கம் கெட்டுப் போய் மனவருத்தமுற்று, இதுசங்கதி அரசனுக்குத் தெரிந்துபோனால் நம்மைச்

பிரசாக்கினை செய்துவிடுவாரேயென்று பயந்து, தன்னாலானமட்டும் அதைக் கண்டு பிடிக்க முயல்வதே சரியென்று நிர்மாணித்துத் தற்செயலாய் ஆமட் என்பவனைச் சுற்றிக் கும்பல்கூடியிருந்த வழியாகப்போனான். அப்போது அங்கே கும்பல் என்னவென்று ஒருவனை விசாரிக்க, அவன் ஆமட் என்று ஒரு தையற்காரன் இருந்தானே; அவன் இப்போது தெய்வீகஞானமடைந்து ஜோதிஷனாக மாறி யிருக்கிறான் என்றதின்பேரில், அந்த தனபாலகன்: ஆ! இந்த ஆசையைப் பார்ப் போமென்று அவனிட்டத்திற்கோடி நடந்தசங்கதியை முற்றும் சொல்லி, நீர் உம் முடைய சாஸ்திரத்தில் வல்லவரானால் மாணிக்கம்போன வழியைச் சொல்லும்; 200 வராகன் வெகுமதி கொடுக்கிறேன். 6 மணிகாலத்துக்குள் சொல்லத் தப்பு வீரானால், வேஷம்போட்டுக்கொண்டு ஜனங்களை மோசம்பண்ணுகிறதாகச் சொல்லி பிரசாக்கினை பண்ணுவிப்பேன் என்றான். அதைக் கேட்டவுடன் நாடியற்று, ஆவி யொடுங்கி, பெருந்திகிலடைந்து, தனக்கு நேரிட்ட சங்கடங்களை நினைத்து நினைத்துத் துக்கித்து, சற்றுநேரம் கைகால் அசையாமல் வாயைமூடிக்கொண்டிருந்து, பிறகு துக்கத்தை உள்ளே அடக்கமாட்டாமல் தன் பெண்சாதி தன்னை இப்படிப்பட்ட ஆபத்துக்கு ஆளாக்கினாளேயென்கிற விஷயத்தைக் கருதி, ஓ பெண்ணே! பெண் ணே! மனிதனுக்கு உன்னைவிட வேறே சத்துருவும் வேண்டுமோவென்று துக்கந் திரக் கூவினான்.

அந்த தனாதிபதியினுடைய பெண்சாதியே அந்த மாணிக்கத்தை எடுத்து ஒளி த்துவைத்திருந்தாள்; குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுவென்னுமாகையாலே அவள் என்னநடக்குமோ என்னமோவென்று தன்னுடைய வேலைக்காரியைத் தன்னு டைய புருஷன் செய்வதை அறிந்துவாவென்று அனுப்பியிருந்தாள். அவள் ஜோதிஷனோடு பேசினதையும், அந்த ஜோதிஷன் கூவினதையும் கும்பலோடு கும்பலாயிருந்து கேட்டிருந்து, அந்த வேலைக்காரி தன்னுடைய எஜமானியி னுடைய திருட்டுத்தனம் ஜோதிஷன் சொன்ன பேச்சுகளினால் வெளிப்பட்டுப் போயிற்றென்று பயந்து, தட்சணமே எஜமானியிடம் ஓடிவந்து, தான் பார்த் ததையெல்லாம் சொல்லி, இன்னும் 6 மணிகாலத்துக்குள்ளே முற்றும் வெளி யாகிவிடும்; அப்புறம் பிராணபயம் நேரிடுமோ என்னமோ தெரியாது; இப்போ தே ஜோதிஷனுடைய தயவைப் பெற்றுக்கொள்ள ஏதாவது வழிதேடவேண்டு மென்றாள். ஆமட் சொன்ன வார்த்தைகள் தன்னுடைய குற்றத்தைத்தான் சுட் டிக்காட்டுகின்றனவென்று நிச்சயித்து, அந்த எஜமானி அவசர அவசரமாய் அந்த ஜோதிஷனண்டை வந்து சரேலென்று அவன் காலில் வீழ்ந்து, என்னை இந்த வேளை காப்பாற்றவேண்டும்; நானே எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளுகிறேன் என்று வேண்டிக்கொள்ள, ஆமட் என்பவன் ஆச்சரியப்பட்டு, நீ என்னிடத்தில் ஒப்புக்கொள்ளவேண்டியதென்னவிருக்கிறது என்றான். அதற்கவள்: உங்க ளுக்குத் தெரியாதவிஷயம் என்னவிருக்கிறது; அந்த மாணிக்கத்தை நான் திருடி வைத்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? என்னிடத்தில் அன்பாயி ராத என் புருஷனுக்குப் பிராணச்சேதம் நேரிடவேண்டுமென்றும், அதனால் எனக் குப் பொருள்கிடைக்கவேண்டுமென்றும் நான் அந்தத் திருட்டுவேலை செய்தேன்; தெய்வத்தன்மையுள்ள நீங்கள் அதைக் கண்டுபிடித்து என்னுடைய கொடிய எண் ணத்தைப் பூர்த்தியாகவொட்டாமற்பண்ணினீர்கள்; என்மேல் தயவுவைக்கும்படி

பிரார்த்திக்கிறேன்; என்ன செய்யச்சொல்லி கட்டளையிட்டாலும் செய்யக் காத்திருக்கிறேனென்று வேண்டிக்கொண்டாள். பிராணாபாயம் வந்துவிட்டதென்று நிராசையுடனே வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்த அந்த ஆமட் என்பவனுக்கு அந்தச் சமயத்தில் தனதிபதியினுடைய பெண்சாதி பிரார்த்தித்த வேண்டுகோளைப்பார்க்கிலும் ஆனந்தத்தைக் கொடுக்கத்தக்கினதாய் வேறு ஏதேனும் உண்டோ? தெய்வலோகத்திலிருந்து தேவர்முதலானோரும் அவ்வளவு சந்தோஷத்தை உண்டுபண்ணியிருக்கமாட்டார்கள். ஆமட் என்பவன் அவள் சொன்னதைக் கேட்டு ஆனந்தக்கடலில் மூழ்கி எழுந்திருந்தவனாய் ஜோதிஷசாஸ்திரத்தில் நிபுணனென்று தோன்றும்படி தைரியமாய் நின்று அவளைப்பார்த்து: பெண்ணே! நீ செய்ததெல்லாம் எனக்குத் தெரியும்; இன்னும் கொஞ்சநேரத்துக்கெல்லாம் உனக்கு அவமானமும் ஆபத்தும் நேரிடுமென்று நிச்சயமாயிருந்தேன்; நீ நல்ல கெட்டிக்காரி; சமயத்தில் வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டையே, அது உனக்கு அதிர்ஷ்டந்தான்; இல்லாவிடில் உன்கதி வேறாயிருக்கும்; இப்போது தப்பினாய். உடனே வீட்டுக்குப்போய் அந்த மாணிக்கத்தை உன்னுடைய புருஷன் படுக்கிற படுக்கையில் தலையணையின்கீழ் வைத்துவிடு; உன் குற்றத்தை நான் வெளியிடாமலிருக்கிறேன் என்றான். இவ்வளவாவது சகாயம்பண்ணானே புண்ணியவான் என்று சந்தோஷப்பட்டு, அவள் அவனுடைய கட்டளைப்படியே வீட்டுக்குச்சென்று மாணிக்கத்தை அவன் குறித்தஇடத்தில் வைத்துவிட்டாள். உடனே ஒரு நாழிகைக்குள் ஜோதிஷன் தனபாலகனிடம் ஓடி, கிரகங்களுடைய ஸ்தானமுதலியவற்றைக் கணக்கிட்டுப்பார்த்ததில் கெட்டுப்போன மாணிக்கம் உங்களுடைய படுக்கையில் தலையணையின்கீழிருக்கிறதாகத் தெரியவருகிறது என்றான். அதைக்கேட்டு அவன்: நம்முடைய படுக்கையிலிருந்தால் நமக்குத் தெரியாமற்போகுமா; இவனுக்கும் ஏதோ காலம் கிட்டிக்கொண்டது; ஆகிலும் படுக்கையைப்பார்த்தால் இரண்டில் ஒன்று தெரிந்துபோகிறதென்றெண்ணிக்கொண்டு அதைப் பார்க்க, ஜோதிஷன் சொன்னஇடத்தில் மாணிக்கமிருந்தது கண்டு போனபிராணன் வந்ததுபோல் முகம்மலர்ந்து திரும்பியோடிவந்து அவனைக் கட்டிக்கொண்டு எனக்கு வந்த ஆபத்தைப் போக்கின மகானுபாவனே! உம்முடைய சக்தியே சக்தி; உம்மைவிட சாமர்த்தியமுள்ள ஜோதிஷன் நான் பார்த்ததில்லையென்று புகழ்ந்து, தான் முன் வாக்குக்கொடுத்தபடி 200 வராகன் வெகுமதிபண்ணி அனுப்பிவிட்டான்.

அந்த வெகுமதியைப் பெற்றுக்கொண்டு தையற்காரன் தனக்கு அன்றையதினம் நேரிட்ட சங்கடத்தைத் தீர்த்ததுமன்றி லாபமுங்காட்டினதற்காகச் சுவாமியைத் துதித்துக்கொண்டே வீடுவந்து சேர்ந்தான். வீட்டுக்குள் நுழையும்போது அவனுடைய பெண்சாதி அவனைக் கண்டமாத்திரத்தில் கிட்ட ஓடிவந்து, என்ன புதுஜோதிஷரே! என்ன கொண்டுவந்தீரென்று கேட்க, அவன் அதோபார் 200 வராகன்; இனியாகிலும் திருப்தியடைந்து என்னைச் சங்கடத்தில் மாட்டாமலிருப்பாயாவென்றுசொல்லி, தான் காலையில் வீட்டைவிட்டுப்போனதுமுதல் அப்போது திரும்பிவந்ததுவரைக்கும் என்னென்ன நடந்ததோ அதையெல்லாம் விஸ்தாரமாய்ச் சொல்லிப்போட்டான். அவள் பொன்மேலே நோக்கமுள்ளவளாகையால் ஆபத்தென்றும் அபாயமென்றும் பாராமல், அன்புள்ள கணவனே! தைரியத்தைக் கைவிடக்கூடாது; மேன்மேலும் புதியதொழிலை விருத்திபண்ணினால் அளவற்ற சம்பத்து அகப்படும்; உலகத்தில் சௌக்கியமும் சந்தோஷமுந்தானே வேண்டியது; அவைகள் கிடைக்குமாயின் எந்தப்பாடுபட்டாலும் படலாமல்லவாவென்றாள். அப்

படியல்ல, என் கண்மணியே! முரட்டுத்தனம்பண்ணாதேயென்று புருஷன் புத்திசொல்ல ஆரம்பிக்கையில், முன்போலக் கோபமூண்டு பிரிந்துபோகிறதாகப் பயங்காட்டினாள்.

ஆமட் என்பவன் பெண்சாதிபேச்சினால் மனமுருகி மறுநாளும் அவளிஷ்டப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டு ஜோதிஷபுஸ்தகங்களோடு புறப்பட்டு முதனாள் செய்ததுபோலவே அன்றைக்கும் தான் ஜோதிஷனென்று ஜனங்களுக்கு அறிக்கையிட்டுக்கொண்டேபோனான். அன்றைக்கும் அவனைச்சுற்றி கும்பல் கூடினார்கள்; ஆகிலும் ஒருவரும் அவனைப் பரிகாசம்பண்ண வரவில்லை. முதனாள் நடந்த விருத்தாந்தம் ஊரெல்லாம் பரவி அவன்பேர் பிரசித்தமாய்விட்டபடியாலே அவனை எல்லாரும் மெச்சினார்கள். இப்படியிருக்க, கழுத்துமாலையையும் கைமோதிரத்தையும் இழந்துவிட்டு, வீட்டுக்குப்போனால் புருஷன் என்னசொல்லுவானோவென்று பயத்தினாலே மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டு ஒரு பெண்பிள்ளை அந்தவழியாகப் போகும்போது, அங்கே என்ன கும்பலென்று விசாரித்து ஒரு தையற்காரன் திடீரென்று தெய்வஞானத்தினால் ஜோதிஷனாகி அற்புதமான காரியங்கள் செய்கிறானென்று தெரிந்துகொண்டு, அப்படிப்பட்ட புகழ்பெற்ற வல்லவனைக் கேட்டால் கெட்டுப்போனசொத்து இருக்கிறஇடம் தெரியவருமென்று கும்பலிற்புகுந்து ஜோதிஷனை நெருங்கி உங்களைப்போல சாஸ்திரஞானிக்கு எல்லாந்தெரியுமாகையாலே என்னுடைய நகைகள் கெட்டுப்போனவிதத்தை எளிதில் கண்டுபிடிப்பீர்களே; தயவுவைத்து அவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டால், நான் 50 வராகன் இனாந்தருகிறேனென்று வேண்டினாள். அதைக்கேட்ட ஆமட் என்பவன் நேற்றுவந்த ஆபத்தினின்று கடவுள் தப்புவித்தார்; இன்றைக்கு அவமானமடையாமல் எப்படி வீடுபோய்ச்சேருகிறது என்று திகிலடைந்து தலையிறங்கி நிற்க, அந்தப் பெண்பிள்ளை முரட்டுத்தனமாய் கும்பலிற்புகுந்துவந்தபடியாலே அரைத்துணி கசங்கி சின்னாபின்னமாய்ப்போயிருந்தது அவன் கண்ணுக்குப் புலப்பட்டது; அதை அவளோடு இரகசியமாய்ச் சொல்லக்கருதி, அவள் கீழேபார் என்று அவள் காதோடே சொன்னான். அவளுடைய ஞாபகமெல்லாம் நகைமேற்சென்றிருந்ததுபற்றி ஜோதிஷன் கீழேபார் என்று சொன்னவுடனே தான் ஸ்நானம்பண்ணுவதற்குமுன் அந்த நகைகளைப் பெட்டியின்கீழ் வைத்ததாக ஞாபகம் வந்தது; உடனே ஜோதிஷனைப்பார்த்து: ஐயா! நீங்கள் சொல்லாமற்போனால் எனக்கு நகைபோனவழியே தெரியாது; ஸ்நானம்பண்ணும்போது நான் அவைகளைப் பெட்டியின்கீழ் வைத்துவிட்டேன்; இப்போது உங்கள் பேச்சினால் அது ஞாபகம்வந்தது; நீங்கள் இங்கேயேயிருங்கள்; வீட்டுக்குப்போய்வருகிறேனென்று சொல்லிவிட்டு, ஒரு கையில் நகைகளையும், ஒரு கையில் வராகனையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்து அவனுக்குக் கொடுக்கிறதாகச்சொன்ன வெகுமதியைக்கொடுத்துவிட்டு வீட்டுக்குச்சென்றாள். ஓர் உதாரணத்துக்கு இரண்டு உதாரணமாகவே அவன்பேர் எங்கும் பரவிற்று; ஆகிலும் அவனுக்குமாத்திரம் உள்மர்மம் தெரியுமாகையால் அந்த வேலை தனக்குத் தகாதென்று நன்றாய்த் தெரியும். அவன் பெண்சாதியோ ஆசைக்கு அளவில்லையென்றபடியே மேன்மேலும் பணத்திலிச்சைகொண்டு அவனை ஜோதிஷசாஸ்திரத்தை உறுதியாகப் பிடிக்கச்சொல்லிப் போதித்தாள்.

உமிநீரின் பிரயோஜனம்.

வாயிலிட்டு மெல்லுகிற பதார்த்தங்கள் உமிநீருடன் செவ்வையாய்க் கலவாமலிருந்தால், அவை அன்னாசயத்தில் செவ்வையாய் ஜீரணமாகா.

ஜ்வரம்கண்டு வருந்துகிறவனுக்கு நாவில் நீர்வறண்டு வாய் முழுதும் உலர்ந்துவிடுகிறதினால், எதையும் புசிக்க கஷ்டமாயிருக்குமென்று நன்றாய்த் தெரியும். தாடை, நாக்கு, ஈறுகள், உதடுகள், மேல்வாய் ஆகிய இவ்விடங்களில், சருமத்துக்கடியில் ஒருவித கிரந்திகள் இருக்கின்றன. அவைகளில் நீர்சுரந்து குழல்கள்வழியாய் வந்து வாயில் விழுந்துகொண்டிருக்கும்; அப்படி விழாவிட்டால் வாய் உலர்ந்து அசவுக்கியம் நேரிடும். நாம் சாப்பிடாமல் சும்மாஇருக்கும்போது வாய் ஈரமாய் இருப்பதற்கு எவ்வளவு உமிநீர் வேண்டியதோ அவ்வளவுமாத்திரமே அற்பமாய் சுரக்கும். போஜனம் செய்யும்போது ஆகாரத்துடன் பொருந்திக்கலக்க அதிக உமிநீர்வேண்டியிருப்பதினால், கிரந்திகளின் தொழில் அதிகரித்து, உமிநீர் அதிகமாய்ச் சுரந்து வாயில்வந்து விழுகின்றது. ஒருவேளை போஜனத்துக்கு, சுமார் $1\frac{1}{2}$ ஆழாக்கு உமிநீர் சுரக்குமென்று சொல்லுகிறார்கள்.



இந்தப் படம் தோல்உரித்த முகத்தில் தாடைகளிலிருக்கிற கோளங்களைக் காண்பிக்கின்றது.

1. உமிநீரையுண்டாக்குகிற கோளம்.
2. உமிநீரை வாய்க்குக்கொண்டுபோகிற குழல்.

புசித்த பதார்த்தங்கள் ரத்தமாகிறதற்குமுன் முதல் மசிந்து பக்குவமாக, வாயில் கருவிகள் ஏற்பட்டிருக்கிறவிதம் மேற்படத்தால் நமக்கு நன்றாய்த் தெரியவருகின்றது.

இந்தக் காரியத்தைச் செவ்வையாய் நிறைவேற்றுவது நமது கடமை; ஆகாரத்தை வாயிலிட்டு சீக்கிரமாய் விழுங்கினாலுஞ்சரி, அல்லது ஒரு பெருங்கவளம்கொண்டு வாய்நிறைய இட்டு செவ்வையாய் மெல்லாமல் உட்கொண்டாலும் சரி, பதார்த்தங்கள் சுலபமாய் ஜீரணமாகாது; அதனால் ரோகங்கள் சம்பவித்து அசவுக்கியம் உண்டாகும்.

ஆகாரத்தை விழுங்கும்போது உண்டாகிற விசித்திரங்கள்.

ஆகாரமானது ஒரு குழலின் வழியாய் கீழுக்கிறங்கி, அன்னாசயத்தில் வந்து விழுகின்றது. அந்தக் குழலுக்கு அன்னவாகி (அன்னக்குழல்) என்று பேர்; அது தொண்டையின் பின்புறத்தில் இருக்கின்றது.

சாப்பிடுகிற பதார்த்தங்கள் அன்னக்குழல்வழியாய் தற்செயலாய் இறங்குகிறதில்லை; கிருமி நகரும்போது, அதின் சரீரம் ஆடுவதுபோல், அந்தக் குழலுக்கு ஒருவிதக் கிருமிச்சலனமுண்டு; அச்சலனத்தால் குழலுக்குள் இருக்கிற வஸ்து கீழ் இறங்கும். இவ்வித அசைவு இல்லாமல் பதார்த்தம் தன் கனத்தால் தற்செயலாய் இறங்கும்படியான வகையிருந்தால், நாம் வாயிலிடுவதை விழுங்கும்போதெல்லாம் தலையை மேலுக்கு எடுக்கவேண்டியதாய் நேரிடும். மேலும் தலையை கீழுக்கிறக்கி வைத்துக்கொண்டு, ஆகாரம் தின்னுகிற மிருகங்களுக்கு விழுங்குவது கஷ்டமாகி அப்போது தலையை மேலுக்கெடுக்கவேண்டியதாய் நேரிடும். ஆகாரக்குழல், ஒரு ஆவர்த்தி சிறிய கவளத்தைப் படிப்படி மெதுவாய் கீழுக்கிறக்கவேண்டியதற்கு பருமன் எவ்வளவு இருக்கவேண்டியதோ, அவ்வளவே ஏற்பட்டிருக்கிறது; உணவை வாய்நிறையக் கொண்டு சீக்கிரமாய் விழுங்கப் பிரயத்தனப்பட்டால், அன்னக்குழல் ஆட்டம் தடைபட்டு, வேதனையுண்டாகி; அசைகிற அசைவும் நின்றுவிடும். அப்போது பதார்த்தம் தொண்டையில் அடைத்துக்கொள்ளும்.

தொண்டையில் ஏற்பட்டிருக்கிற (மேல் விவரித்த) விசித்திரங்களைத் தெரியப்படுத்தாவிட்டால் ஆகாரம் வாயிலிட்டு விழுங்குவது சுலபமென்று எல்லோரும் அஜாக்கிரதையாய் இருந்துவிடுவார்கள். சாப்பிடும்போது ஜாக்கிரதையாயிராவிடில், ஆகாரம் தொண்டையில் இறங்கும்போதெல்லாம் பிராணசங்கடம் சம்பவிக்கும். இதன்றியில், இன்னமொரு அபாயமுண்டு; அதாவது: ஆகாரக்குழல் அன்றி மற்றொரு குழல் அதனோடு சேர்ந்திருக்கிறது; அந்தக் குழலின் வாய், நாக்கு அடியில் திறந்துகொண்டிருக்கும். ஆகாரம் வயிற்றுக்குள் இறங்கக் குழல் ஒன்று இருப்பதுபோல், காற்று மார்புக்குள் சுவாசப்பையில் இறங்க குழல் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சுவாசக்குழல் கழுத்து முன்பக்கமிருக்

கும்; இதனுடைய வாயைக் கடந்துகொண்டுதான் பதார்த்தங்கள் அன்னக்குழலுக்குப் போகவேண்டியது. ஆகையால், அன்னக் குழலுக்குப்போகவேண்டிய பதார்த்தம் ஒருவேளை தப்பி, சுவாசக் குழலில் இறங்கி, அது உடனே வெளிக்குவாராமல் தங்கிவிட் டால், மூச்சடைப்புகண்டு மரணமடைவது நிச்சயம்.

இவ்வித அபாயம் நேரிடாமலிருக்க, சுவாசக்குழலையடுத்து அடிநாக்கைத் தொடர்ந்து ஒரு தட்டையான சவ்வு இருக்கின்றது. அதற்கு உண்ணாக்கு என்று பெயர். சாப்பிடுகிற வஸ்துக் கள் உள்ளுக்கிறங்கும்போது உண்ணாக்கானது சுவாசக்குழல் துவாரத்தின்மேல் படிந்து, அதை மூடிக்கொள்ளும்; பதார்த்தங்கள் உண்ணாக்கைக் கடந்துபோனபிறகு, அந்த உண்ணாக்கு மேலுக்கு நிமிர்ந்து, சுவாசக்குழலின் வாயைத் திறந்துவிடும். துவாரம் திற ந்துகொண்டபிறகு சுவாசம் சாதாரணமாய் நடக்கும். இவ்வித மாய் ஏற்பட்டிருப்பதினால், எதையாவது விழுங்கும்போது சுவா சத்தை அடக்கும்படி நேரிடுகின்றது.

பேசும்போதும், சுவாசம் ஓடிக்கொண்டிருக்கும்போதும், சுவா சக்குழல் திறந்துகொண்டிருக்கும்; ஆகையால் சாப்பிடும்போது பேசினாலும் நகைத்தாலும் அப்பொழுது சுவாசக்குழல் வாய் அகலத்தில் கொஞ்சம் திறக்கப்பட்டு, சிறிய அணுக்கள் அதிலிற ங்கிவிடும்; இறங்கிவிட்டால் ஓய்வு இல்லாத இருமல்கண்டு அதை வெளிப்படுத்திவிடும். சுவாசக்குழலின் வாய் செவ்வையாய் மூடி பத்திரப்படுத்தாமலிருந்தால், ஆகாரம் வழிதப்பி வேறுவழிசென்று, இருமல்முதலிய உபத்திரவங்கள் சம்பவிக்குமென்று நமக்குத் தெ ரிந்திருக்கவேண்டியது.

தசகுமார சரிதம்.

இரண்டாவது:

பிராமணனுக்குத் துணைசெய்தல்.

சென்ற மூன்றுமாதத்துச் சஞ்சிகைகளிலும் குமாரர்களின் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றி எழுதினோம்; இனி அவர்கள் வெற்றிபெறவேண்டுமென்று வெளியே யாத்திரைபுறப்பட்டுச் செல்லுவதைச் சொல்லுகிறோம்.

இப்படியாக அந்தக் குமாரர்களெல்லாம் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சியடைந்து சிறப்புற்றிருந்தார்கள். அப்படியிருக்குங்காலை யில் ஒருநாள், வாமதேவமுனிவர் ராஜஹம்ஸனிருக்கும் இடத் திற்குவந்து, அங்கே அந்த மஹாராஜன் மிகுந்த அழகும் ஆவ லுமுள்ள அப்பிள்ளைகளோடு விநோதமாயிருக்கக்கண்டு ஆனந்த பூரிதராயினார். அந்த முனிவரைக்காணவே அக்குமாரர்களும் போரா

னந்தமடைந்து அவர் திருவடிகளில் வந்துவணங்க, அந்த மகாரிஷி, அவர்களை எடுத்து மார்போடணைத்து ஆசிர்வாதம்பண்ணி, அந்த ராஜனைப்பார்த்து ஒரு வார்த்தைசொன்னார். ஓ மஹாராஜனே! உம்முடைய மனோரதப்படி, தன் தோழர்களோடுகூடிய உமது குமாரருக்குத் தக்கவயது வந்திருக்கிறது. இதுதான் இப்பிள்ளைகளுக்குத் திக்விஜயயாத்திரை பண்ணவேண்டியகாலம்; இவர்கள் எவ்வித மான சங்கடம் நேர்ந்தாலும் சலியார்கள். ஆதலால் இப்போதே இவர்களைப் பிரயாணம்பண்ணி அனுப்பலாம் என்றார். அது கேட்டு அந்த சக்கரவர்த்தி அம்முனிவர்க்குத் தண்டனிட்டு அவருரைத்த படியே சேனைகளைச் சித்தப்படுத்தி, தன் குமாரனுக்கு மற்றப் பிள்ளைகளையெல்லாம் மந்திரியாக்கி, அவரவருக்குத் தக்கபடி நல்லபுத்தி உபதேசித்து, சோதிஷசாஸ்திரிகள் ஏற்படுத்திய நல்லமுகூர்த்தத்தில் திக்விஜயம்பண்ணிவரும்படி அனுப்பினான்.

அப்படியே ராஜவாஹனனும் தந்தைசொல் தவறாமல் உடனே புறப்பட்டுப்போகையில் வெளியே நற்சகுனங்கள் உண்டாகக்கண்டு தன் காரியம் கைகூடினதாகவே எண்ணிக்கொண்டு கொஞ்சதூரம்போய் விந்தியமலைக்காட்டில் நுழைந்தான். அங்கே ஒருவன் உடம்பெல்லாம் பாணம்பொத்திக் காய்காய்த்துப் பார்வைக்குப் பயங்கரமாய் மார்பில் ஒரு பூணூலும் தரித்துக் கொண்டிருந்தான். ராஜவாஹனன் அவனைக்கண்டு, ஓ ஸ்வாமி! நீர் யார்? மனுஷியசஞ்சாரமேயில்லாமல் முள்ளுங்கல்லுமாய்ப் புலிகரடிகளுக்கேயுரிய இக்கானகத்தில் ஒருவராய் ஏன் அலைகின்றீர்? பூணூலைப் பார்த்தாலோ பிராமணனென்று தோன்றுகிறது; காயங்களைப்பார்த்தாலோ வேடனென்று நினைக்கவேண்டியிருக்கிறது; இதன் வரலாறென்னவென்று கேட்க, அந்தப் புருஷன்: இவனைப்பார்க்கையிலேயே இவ்வளவு வடிவழகு ஸாதாரண மனிதனுக்கு இருக்கமாட்டாது; இவன் தெய்வப்பிறப்புதான் என்று எண்ணி, அவன் தோழர்களின் முகமாய் அவன் இன்னானென்று செம்மையாய்த் தெரிந்துகொண்டு தன் சரிதத்தைச் சொல்லத் துவக்கினான்.

ஓ ராஜகுமாரனே! சொல்லுகிறேன் கேள்: இக்காட்டில் தம் குலாசாரங்களையெல்லாம் கொஞ்சமேனும் மனதினாலும் நினையாமல் வேதநாற்றமும் அறியாதவர்களாய்ப் பாவத்தையே தேடிக் கொண்டு வேடர்களுடன் கூடி அவர்களிட்ட சோற்றையே புசித்துக்கொண்டு சில பார்ப்பனப்பேர்விகளிருக்கின்றனர். அவர்களுள் ஒருவன் பிள்ளை நான், எனக்கு மாதங்கன் என்று பெயர்; மனதினாலும் நினைக்கக்கூடாத தீச்செயல்களைச் செய்திருக்கிறேன். நானும் அந்த வேடர்களோடுகூட ஊரூராய்ப் புகுந்து செல்வமுள்ளவர்களை ஆண்பெண் அடங்கலுஞ் சிறையிட்டுச் சிறிதும் மனவிரக்கமில்லாமல் அவர் பொருள்களைக் கொள்ளையடித் திரிந்து

கொண்டிருந்தேன். இப்படியிருக்கையில் ஒருநாள் ஒரு பிராமணன் வழியே போகக்கண்டு, என்னுடனாளிகள்கூடி அவனைக் கொல்லப்புகுந்தனர். அப்போது எனக்குக் கொஞ்சம் பரிதாபமுண்டாகி, ஓ பாபிஷ்டர்களே! அந்தணனை அடிக்கவேண்டாம் என்றேன். அவர்கள் புருவம் நெறித்துப் பல்லைக்கடித்து என்னை வெருட்டினார்கள். அவர்கள் சொன்ன கடுஞ்சொல்லைக் கேட்கமாட்டாமல் நான் அந்தப் பிராமணன்பக்கமாய் நின்று அவற்காக நெடுநேரமளவும் போராடி, கடைசியில் அவர்களண்டை அடிபட்டு உயிருமிழந்தேன். உடனே யமலோகத்திற்குச் சென்று அங்கே சபைநடுவே அநேகர் சுற்றிலும் நின்று துதி செய்ய ரத்னசிங்காசனத்தில் வீற்றிருக்கும் யமதர்மராஜனைக்கண்டு சாஷ்டாங்கமாய் வந்தனம்பண்ணினேன். அவர் என்னைப்பார்த்துச் சித்திரகுப்தன் என்னும் தன் முதன்மந்திரியை அழைத்து அப்பா! இவற்கு மரணகாலம் இதல்லவே; இவன் நடந்ததெல்லாம் கெட்டநடத்தையாயிருந்தாலும் பிராமணனுக்காகவன்றோ பிராணனைக் கொடுத்தான். ஆதலால் இனிமேல் இவன் செய்த பாவங்களெல்லாம் நீங்கி நற்செய்கைகளிலேயே இவனுக்கு ஆசையுண்டாகப் போகிறது. இவ்விடத்தில் பாபபலன்களை அனுபவிக்கின்றவர்களுடைய யாதனையைமாத்திரம் சற்றே காட்டிவிட்டு, மறுபடியும் முன் சரீரத்திலேயே கொண்டுவிடவேண்டுமென்று கட்டளையிட்டார். அந்தச் சித்திரகுப்தனும் தருமராஜன் நியமனப்படியே நரக வேதனை அனுபவிக்கின்றவர்களையெல்லாம் காட்டினான். ஓரிடத்தில் பழுக்கப்பழுக்கக்காய்ந்த இருப்பக்கம்பங்களில் அநேகரைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் பொங்குகிற எண்ணெயில் அநேகரை வாரிவாரிப் போட்டுக்கொண்டிருந்தார்கள். சிலரைத் தடியாலடித்து இடுப்பை ஒடித்துக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் சிலரைக் கல்லுளியால் பொளிந்துகொண்டிருந்தார்கள். இப்படியே இன்னும் அநேகவிடங்களில் அநேகர் பலவித வேதனைகள் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். அவைகளையெல்லாம் கண்டபோது எனக்கு உடல்நடுங்கி மனம்வெருண்டு எப்போ வெளியே போகப்போகிறோம் என்றாயிற்று. சித்திரகுப்தன் இவைகளையெல்லாம் காட்டி நல்லபுத்தியையும் உபதேசித்துப் போம்படி என்னை விட்டுவிட்டான். உடனே நான் முன் விட்டுவிட்டுப்போன உடம்பில்வந்து புகுந்தேன். இவ்வளவுக்குள் அந்தப் பிராமணர் என்னை எடுத்து ஒரு பாறைமேல் விட்டுக்கொண்டு ஒருவேளை பிராணன் வருமோ என்னவோவென்று சீதோபசாரஞ் செய்துகொண்டிருந்தார். இதற்குள் இச்செய்தி என் வீட்டிற்குத் தெரிந்து அங்கிருந்து என் பந்துஜனங்களெல்லாரும் ஓடிவந்து வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய் என் உடம்பிலிருந்த காயங்களை ஆற்றினார்கள். என்னிடத்தில் உபகாரநினைப்புள்ள அந்தப் பிராமணோத்தமர் எனக்குச்

சகலவித்தைகளையும் கற்பித்து, வேதமந்திரங்களையும் நன்னடத்தைகளையும் பரமேஸ்வரனை பூஜிக்கவேண்டிய வழிகளையும் உபதேசித்து, நான் செய்த பூஜைகளையும் பெற்றுக்கொண்டுபோயினார்.

அதுமுதல் நான், வேடர்களோடு கூடி வாழும் என்னினத்தாரையொழித்துவிட்டு எப்போதும் பரமேச்வரனையே தியானம் பண்ணிக்கொண்டு இக்காட்டிலேயே வாஸம்பண்ணுகிறேன். இதுதான் என் வரலாறு. ஓ நாதனே! உம்மோடுமாத்திரம் விண்ணப்பஞ்செய்யத்தக்கதாய் ரகசியம் ஒன்று இருக்கிறது, ஏகாந்தத்தில் வந்தால் சொல்லுகிறேன் என்றான். அவனும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொள்ளவே அவனை ஒரு மூலையில் அழைத்துக்கொண்டுபோய், ராஜனே! இன்றையதினம் பின்மாலை வேளையில் நான் ஒரு ஸ்வப்னம் கண்டேன். அதாவது: ஸ்வாமி எழுந்தருளி தூங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பி முக மலர்ந்தவராய்ப் பக்கத்தில் தலைவணங்கிநின்ற என்னைப்பார்த்து, தண்டகாவனத்து நடுவிலோடுகின்ற ஆற்றங்கரையில் ஒரு லிங்கமிருக்கிறது; அதன் பின்புறத்தில் ஒரு குகையுண்டு; அங்கே செப்புத்தகட்டில் ஒரு பட்டோலை எழுதிவைத்திருக்கிறது; அதை எடுத்துக்கொண்டு அந்த பிலத்தின்வழியாய் நுழைந்து பாதாளலோகத்துக்குப்போய் அதில் சொல்லியிருக்கிறபடி நடத்தி, நீயே பாதாளலோகத்திற்கு அதிபதியாகக்கடவை; உனக்கு ஒத்தாசைசெய்ய ஒரு ராஜகுமாரன் இப்போவோ நாளையோ வரப்போகிறான் என்று அனுக்கிரகித்தார். அப்படியே நீயும் வந்து சேர்ந்தாய்; என் இஷ்டத்தைக் கைகூட்டவேண்டுமென்றான். ராஜவாஹனனும் அதற்குச் சம்மதித்துப் பாதிராத்திரியில் மற்றவர்களெல்லாம் கண்ணயர்ந்து தூங்குகையில் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு மாதங்கனோடுகூடப் புறப்பட்டுப்போயினான்.

அங்கே படுத்துத் தூங்கியவர்களெல்லாம் காலையிலெழுந்து பார்த்து ராஜனைக்காணாமல் மனங்கலங்கி அக்காடுமுழுதுந்தேடியும் அகப்படாமையால், சீமைமுழுதுந்தேடவேண்டுமென்று யாவரும் கடைசியில் ஓரேவிடத்தில் வந்து சேரவேண்டுமென்று சங்கேதஞ்செய்துகொண்டு, மூலைக்கொருவராய்ப் பிரிந்துபோனார்கள்.

அந்த மாதங்கனும் தனக்கு மகாசூரனான ராஜகுமாரன் துணையாய்வரவே மிகவும் சந்துஷ்டனாய் சுவாமி ஸ்வப்னம் சாதித்தபடி அங்கிருந்த பட்டோலையை எடுத்துக்கொண்டு, அதன் பக்கத்திலிருந்த பிலத்தின்வழியாய்ப் பாதாளலோகத்திற்குச்சென்று அவ்விடத்தில் ஒரு பட்டணத்திற்குச் சமீபத்தில் ஓர் உத்தியானவனத்தின் நடுவே ஒரு குளக்கரையில், அந்தப் பட்டோலையில் சொல்லியபடி ஹோமகுண்டம்வெட்டித் தீவளர்த்தி, நெய்முதலியவைகளால் அநேக வாஹுதிகள் செய்து தனக்குத் துணையாக

வந்த ராஜவாஹனன் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்க அநேக மந்திரங்கள் ஜபித்துத் தன்தேகத்தையே பூரணாஹுதி பண்ணி உடனே அந்த அக்கினிமத்தியினின்றும் தேஜோமயமான ஒரு தெய்வசரீரத்தோடு எழுந்திருந்தான். எழுந்திருந்தவுடனே தேவகன்னிகையொருத்தி உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்து தோழிப்பெண்கள் பின்தொடர்ந்துவர அன்னநடையாய் நடந்து வந்து ஒரு விலையில்லா மணியை அவற்குக் காணிக்கையாய்க் கொடுத்தாள். அவளைக்கண்டு அந்தப் புருஷன், பெண்ணே! நீ யார்? எங்கிருந்து வருகிறாய் என்று கேட்க, அவள் ஸ்வாமி பிராமணோத்தமரே! அடியாள் இந்தப் பாதாளலோகத்தரசனுடைய மகள், எனக்குக் காளிந்தி என்று பெயர், என் தந்தையானவர் ஏகச்சத்திராதிபராய் இப்பாதாளலோகம் முழுதும் ஆண்டுவந்தார். ஒருகால் தேவதைகளுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம்நடந்தபோது என் பிதா தேவதைகளைக் கிட்டநாடவொட்டாமல் துரத்தியடிக்கவே, ஸ்ரீமகாவிஷ்ணு இவர் பராக்கிரமத்தைப் பொறுக்கமாட்டாமல் உடனே யமலோகத்திற்கு அனுப்பினார். தந்தை இறந்துபோன துக்கத்தால் நான் கண்ணையே விழியாமற்கிடந்தேன். அப்போது தயாளமனதுள்ள ஒரு முனிவர் என்னண்டைவந்து, குழந்தாய் விசனப்படாதே; ஒரு மகாபுருஷன்வந்து உன்னைக் கலியாணம்பண்ணிக்கொண்டு இந்தப் பாதாளலோகத்தை ஆளப்போகிறான். அப்புறம் உனக்கு யாதொரு குறைவுமில்லையென்று அனுக்கிரகித்தார். அன்றுமுதல், வர்ஷாகாலத்தைச் சாதகபக்ஷி எதிர்பார்ப்பதுபோல் நான் உம்முடைய வரவை எதிர்பார்த்திருந்தேன். என் பாக்கியவிசேஷத்தால் வந்து சேர்ந்தீர். உமது வரவையறிந்து என் மந்திரிமார்களெல்லாம் உம்மை அழைத்துக்கொண்டுவரும்படி சொன்னார்கள். ஆதலால் இந்தப் பட்டணத்திற்கு வந்து என்னோடுகூட இந்த ராஜ்யத்தையும் ஆளவேண்டுமென்றாள். மாதங்கனும் அதைக்கேட்டு ஸந்தோஷமடைந்து ராஜவாஹனனை அனுமதிகேட்டுக்கொண்டு அந்தப் பெண்ணைக் கலியாணஞ்செய்துகொண்டு அந்த ராஜ்யத்தையும் கைப்பற்றிச் சுகமாய் வாழ்ந்திருந்தான்.

தோழர்களை வஞ்சனைபண்ணி விட்டுவிட்டுவந்த ராஜவாஹனனும் தான் வந்தகாரியமுடிந்தபடியால் அவர்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டு அந்த மாதங்கனைச் செலவுகேட்டான். அவனும் தனக்குப் பேருதவிசெய்த ராஜகுமாரனுக்குப் பசிதாகமுதலியவைகளொன்றும் உண்டாகாதபடி செய்ய வல்லதான தனக்குக் கிடைத்த ரத்தினத்தை வெகுமதியாய்க் கொடுத்துப் பாதாளலோகந்தாண்டி மேலுலகம்போமளவும் வழிகொண்டு விட்டனுப்பினான். ராஜவாஹனன் தன் உடனாளிகளைத் தான் விட்டுவிட்டுப்போனவிடத்தில் வந்துபார்த்து அங்கே அவர்களைக் காணமல் பலவிடங்களிலும் தேடிக்கொண்டுபோகையில் ஒரு

நாள் வெயில் பொறுக்கமாட்டாமல் இளைப்பாறுவதற்காக ஒரு தோட்டத்திற்குள் பிரவேசிக்க, அங்கே ஒருவன் வேலையாளர்களெல்லாம் சுற்றி உபசாரஞ்செய்துகொண்டிருக்க, மனையாளோடுகூட ஊசலாடக்கண்டான். அவன் இந்த ராஜகுமாரனைப்பார்த்து உளமகிழ்ந்து முகமலர்ந்து, இதோ என் நாதன், இதோ சந்திர வம்சத்தரசன், இதோ ராஜவாஹனன், என் பாக்கியவிசேஷத்தால் இவருடைய திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தேன், இப்போதான் எனது இரண்டுகண்களும் சபலமாயிற்று என்றிப்படி ஆனந்தப் பெருக்கால் உடம்புதெரியாமல் பேசிக்கொண்டு ஊசலினின்றும் சரேலென்று குதித்தோடிவந்து ராஜவாஹனனுடைய கால்களில் வீழ்ந்தான். அரசனும் இவன் ஸோகதத்தன் என்று தெரிந்து, ஆனந்தக்கண்ணீர்பெருக உடம்பெல்லாம் மயிர்குச்செறிய, அவனை எடுத்து ஆலிங்கனம்செய்துகொண்டு ஒரு சுரப்புன்னைமரத்தின் கீழ் உட்காந்துகொண்டு அவன் யோகக்ஷேமங்களை வினவினான். அப்பா ஸோகதத்த! நீ இத்தனைநாள் எந்தத்தேசத்தில் எவ்விதமாய் வாஸம்பண்ணினாய்; இப்போது எங்கேபோகிறாய்; இந்தப் பெண் யார்; இந்தச் சேனைகளெல்லாம் உனக்குக் கிடைத்தவிதமென்ன சொல்லென்று கேட்டான். அப்படியே ஸோமதத்தனும் மிகவணக்கமாய் முறையே தன் சரித்திரங்களைச் சொல்லத்தொடங்கினான்.

நமது நடை உடை பாவனைகள்.

கனம்பொருந்திய திருவாங்கூர் மஹாராஜாவின் சகோதரராகிய இளைவரசர் நம்முடைய தேசத்தாருடைய நீதிமுறைகளின் நிலைமையைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்திருக்கிறார். தத்தம் தொழிலைக் குற்றங்குறையின்றி இனிதுமுடிக்கும்பொருட்டு யாவரும் அறிந்துகொள்ளவேண்டிய மிகவும் உபயோகமான விஷயங்கள் சில அந்த உபந்நியாசத்தில் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறபடியால், இந்தச் சஞ்சிகையைப் படிப்போருடைய நன்மையைக்கருதி அதை இங்கு ஒருவாறு சுருக்கிக்கூறுகிறோம்.

மனிதனுக்கும் மற்ற மிருகஜாதிகளுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசங்களிலொன்று என்னவென்றால், மனிதனுக்கு ஞானபாவம் உண்டு; மிருகங்களுக்கு அது கிடையாது. எவ்வளவு இழிந்த காட்டுமனிதனானாலும் ஒருவேளை இல்லாவிட்டால் மற்றொருவேளை தெய்வம் ஒன்றிருக்கிறதென்று தோன்றும். மிருகங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் எப்போதாவது உண்டாகிறதென்று நம்புவதற்கு இடமில்லை. ஒரு நாய் தன்னுடைய எஜமானன் இறந்தபிறகும் அவனை விட்டுப்பிரியாமல் அவனைப்

போர்த்திருந்த துணியின்கீழ்ப் பதுங்கிக்கொண்டிருந்ததாம்; அது தனக்கு அவன் முன்செய்த நன்மைகளுக்கெல்லாம் அவனுக்கு நன்றிபாராட்டிற்று என்பதற்கு இது போதுமான திர்ஷ்டாந்தமாயிருக்கிறது. இந்தவிஷயத்தில் நாகரிகமுள்ள மனிதர்களுக்குள் அநேகர் இந்த நாய்க்குப் பின்னிற்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை; ஆயினும் மிருகங்களுக்கெல்லாம் புத்தியில் சிறந்ததென்று சொல்லப்படுகிற நாய்க்கும் தான் முன்னாலே அடைந்த உபகாரத்தை நினைத்துத் தன்னுடைய கடமையைத் தீர்க்கவேண்டுமென்கிற எண்ணம் ஒன்றுதவிர, வேறோர் எண்ணம் தோன்றுமென்று எண்ணுவதற்கு நியாயமில்லை. ஆகையால் ஞானபாவம் மனிதனுக்கே உரியதென்றுசொல்லலாம். அந்தப்பட்சத்தில், அந்தப் பாவத்தினின்று கிளைக்கும் நீதிநியாயங்களும் மனிதனுக்கேயன்றி மிருகங்களுக்கு இல்லையென்பது நிச்சயம். இவைகள் என்றென்றைக்கும் ஒரேநிலையில் நிற்பன; எல்லா தேசத்துக்கும் எல்லா ஜாதிக்கும் பொதுவாயிருப்பன. ஸத்தியம் தர்மம்முதலான இவைகளை பிரதமநீதிகள் அல்லது மூலநீதிகள் என்னலாம். இவைகள்தவிர, மனிதனுக்கே உரிய இன்னொருவகை நீதிகளும் உண்டு. இவைகள் முன் சொன்னவைபோலல்லாமல் அந்தந்த ஜாதியாருடைய குணகுணவிசேஷங்களினால் தோன்றி மாறுபாட்டுக்கிடமாயிருக்கின்றன. ஆகிலும் நமக்கு உபயோகமாயிருக்கிற விஷயத்தில் இரண்டும் சமமானவையே. பின்சொன்ன நீதிகளை சாதாரணமாய் நீதிகளென்று வழங்குகிறதில்லை; வழக்கங்களென்றும், நடத்தைகளென்றும், ஒழுங்குகளென்றும் பலவிதமாய்ச் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு தேசத்தாருக்கும், ஒவ்வொரு ஜாதியாருக்கும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் தத்தமக்குரிய நடபடிக்கைகளுண்டு. நம்முடைய தேசத்தாருடைய ஒழுக்கங்கள் எந்த ஸ்திதியிலிருக்கின்றனவென்று சற்று ஆராய்ந்துபார்ப்போம்.

காலம்தப்பாமை.—இது பிரதமநீதிகளில் சேர்ந்ததுமல்ல, கேவலம் அற்பமான ஆசாரங்களில் சேர்ந்ததுமல்ல; இரண்டுக்கும் நடுத்தரமானது. இது மறுமைக்குப் பயன்படாதாயினும், இவ்வுலகத்தில் உள்ளளவும் நம்முடைய காரியங்களின் சித்திக்கும் பிறருடைய சௌக்கியத்திற்கும் மிகவும் அவசியமானது. நம்முடைய தேசத்தார் இதைக் கவனிப்பதே இல்லை; பாரிபணவிஷயங்களில் தவிர, மற்றவிஷயங்களில் காலதாமசம், அட்டி, சாவகாசம்முதலிய குற்றங்கள் சிநேகிதர்களிடத்தில் இருக்குமாயின், அவைகளைப் பாராட்டிக் கண்டிப்பாயிருப்பது பிசகென்றும் சிநேகத்துக்குக் குறைவென்றும் எண்ணுகிறார்கள். கல்வித்தேர்ச்சியடைந்திருக்கும் இந்துக்களிடத்திலும் இந்த துர்க்குணம் கொஞ்சம் கொஞ்சம் உண்டு. துரைத்தனகாரியங்கள், ஜனோபகாரகாரியங்கள், வித்தியாவிஷயகாரியங்கள்முதலான விசேஷமான பெரியகாரியங்களில் தலையிட்டுக்கொண்டிருப்பவர்கள், சில அற்பவிஷயங்களில் காலநிர்ணயத்தை அனுசரிக்கத் தப்பிப்போனால் அது

பெருங்குற்றமாகமாட்டாது. பெருங்குற்றமாகமாட்டாதாயினும் அவர்களிடத்திலும் அது குற்றம் குற்றமே; ஏனெனில் எந்தவிஷயத்திலும் கால ஏற்பாட்டின்படி நடக்கத் திறமையற்றவன் அந்தத் திறமையின்மையினால் அயலாருக்கு ஏன் வீண்சிரமம் கொடுக்கவேண்டும்? அப்படியிருக்க, சாதாரணமான வேலைகளைச் செய்துவருபவர்கள் காலம் தவறுவதற்கு எவ்வளவேனும் நியாயமுண்டா? நம்முடைய தேசத்தில் நடந்தேறிவரும் வழக்கம் எப்படிப்பட்டதென்றால், ராமன் அவசரநிமித்தமாக கோவிந்தனிடத்திலிருந்து கொடை இரவல்வாங்கிக்கொண்டுபோகிறான்; தன் காரியம் ஆனபிறகு உடனே கொடையைத் திருப்பவேண்டுமென்கிற ஞாபகமேயிராமல், ராமன் அந்தக் கொடையைத் தன் வீட்டில் போட்டுவைக்கிறான். சின்னசாமி ராமன்வீட்டுக்கு ஏதோகாரியமாய்ப்போக நேரிட்டு அங்கேயிருக்கிற கொடையைப்பார்த்து நல்லதென்று மகிழ்ந்து அண்ணே! இந்தக் கொடை நன்றாயிருக்கிறது; இதைப்போல ஒன்று பண்ணிவைத்துக்கொள்ளவேண்டுமென்று ஆசையிருக்கிறது; மாதிரிகாட்ட இதைச் சற்று கொடுப்பாயாவென, ராமன்: சுகமாயெடுத்துக்கொண்டுபோ என்கிறான். அப்படியே சின்னசாமி அதை எடுத்துக்கொண்டுபோய் இந்தமாதிரி ஒரு கொடைதைத்துக்கொடு என்று அய்யாசாமி என்கிற கொடைதைப்போனிடத்தில் கொடுத்துவிடுகிறான். முன்னாலேயே பணங்கொடுத்துவிட்டு கொடைக்காக அடிக்கடி நிர்ப்பந்தப்படுத்துகிற ராகவனுக்கு அய்யாசாமி அந்தக் கொடையைக் கொடுத்துவிடுகிறான். இப்படிச் செய்யும்போது புதிதாய் ஒன்று பண்ணி பதில்கொடுக்கலாமென்ற எண்ணமேதவிர, அய்யாசாமிக்கு மோசம்பண்ணவேணுமென்கிற எண்ணமே கிடையாது. கடைசியில் கோவிந்தனுடைய கொடை எப்படிபோய் எப்படிவந்தது பாருங்கள்? பார்க்கப்போனால் ஒருவரும் மோசம்பண்ண எண்ணவில்லை. இவ்வளவுமாத்திரமா? காலந்தப்பாமை சுத்தக்கட்டுப்பாடென்றும், உண்மையான சிநேகத்துக்குக் கட்டுப்பாடுகள் உரியனவல்லவென்றும் நம்முடைய தேசத்தார் எண்ணுகிறார்கள். நாகரிகம் அதிகமாக அதிகமாக, அந்தக் குற்றத்தினால் விளையும் தீங்குகள் மேன்மேலும் பிரகாசமாய்த் தெரிகின்றன. காலந்தப்பாமல் நடப்பது கௌரவத்துக்குத் தாழ்வென்று சாதாரணமாய் எண்ணுவது உண்டு. அப்படியானால், இந்தக் குற்றத்தில் பணக்காரர்கள் பிச்சைக்காரர்களைவிட மேலாயிருக்கவேண்டுமென்றும், உத்தியோகஸ்தர்கள் பணக்காரர்களைவிட மேலாயிருக்கவேண்டுமென்றும், ராஜகுமாரர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு மேலாயிருக்கவேண்டுமென்றும், ராஜகுமாரர்களுக்கு ராஜன் மேலாயிருக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது. இந்த மூட எண்ணம் இந்துக்களிடத்தில்மாத்திரமல்ல; கீழ்த்திசை ஜாதியார் எல்லாரிடத்திலும் உண்டு. பெர்ஷியாதேசத்து ராஜா சிலநாளைக்குமுன் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது மஹாராணியவர்களிடத்திலும் காலந்தவறி நடந்தாராம்.

காலந்தவறுவதாகிய குற்றத்துடன் காலத்தின் சிறப்பை அறியாமையாகிய குற்றமுமுண்டு. இன்றைக்குச் செய்யக்கூடிய காரியத்தை நாளைமட்டும் வையாதே என்று இங்கிலீஷில் ஒரு பழமொழி உண்டு. நாளைக்குச் செய்யலாமானால் இன்றைக்குச்செய்; சாயங்காலம் செய்யலாமானால் காலமே செய் என்று மஹாபாரதத்தில் சொல்லியிருக்கிறது. நாம் செய்கிற காரியங்களோ இந்தப் பழமொழிகளைத் தலைகீழாய்த் திருப்பிவிடும். ஒரு வேலைக்காக ஏற்படுத்தியிருக்கிற காலத்தின் முடிவில் அந்த வேலையைச் செய்யத்தொடங்குவது நம்மவர்களிடத்திலுள்ள பெருங்குற்றங்களுக்கெல்லாம் பெருங்குற்றம். எவ்வளவு வேலைசெய்தால் அவ்வளவுபணம் என்று தெரியாத பிதிரார்ஜ்ஜிதப் பணமுடையவர்களிடத்தில் மாத்திரமல்ல, அன்றாடம் வேலைசெய்து ஜீவனம்பண்ணும் கூலிக்காரர்களிடத்திலும் வீணாய்ப் பொழுதுபோக்கும் இந்தத் துர்க்குணம் விசேஷமாய் உண்டு. ஒரு அணா உண்டானால் ஒருநாள் பொழுதுபோமாயின் அற்பவேலைக்காரர்கள் வீண் பொழுதுபோக்காமல் வேலைசெய்து இரண்டு அணா சம்பாதிக்கக்கூடுமானாலும், சம்பாதிக்கிறதில்லை. கூலிக்காரர்கள்தான் இப்படியோவென்றாலோ, சற்று உயர்ந்த வேலைக்காரரும் அப்படியே. இவர்களுக்குச் சாமர்த்தியம் இருக்குமளவு உழைப்புமிருந்தால் சிலகாலத்துக்குள் வெகுபணம் சம்பாதித்து ஆஸ்தியாக்கிப்போடலாம். தினக்கூலி வாங்கிக்கொண்டு வேலைசெய்கிறார்களேயல்லாமல், வேலையின்பேரில் மொத்தமாய்ப் பணம் கொடுக்கிறதாக வேலைசெய்யச்சொன்னால் உடன்படமாட்டார்கள். இதனால் அவர்களுக்கு நஷ்டம் உண்டாவதுமாத்திரமன்றி, இன்னும் சில கெடுதிகளுண்டு. வேலைப்பாடு எவ்வளவு சிறப்பாயிருந்தாலும், காலதாமசத்தைப்பற்றி ஒருதரம் ஒரு வேலைக்காரனிடத்தில் போனவன் மறுபடியும் அவனிடத்திற்குப்போகப் பயப்படுகிறான். காலதாமசத்தினால் பிறருக்கு உபத்திரவம் உண்டாக்குகிறார்கள்; அவநம்பிக்கைக்குப் பாத்திரராயுமாகிறார்கள். நாளைக்கு ஆகட்டும் நாளைக்கு ஆகட்டுமென்று சும்மா இழுக்கடிக்கிறவனிடத்தில் அவநம்பிக்கை பிறப்பது அதிசயமோ!

ஒழுங்கு.—ஆகையால் எந்தெந்தகாலத்தில் எந்தெந்த காரியத்தைச் செய்யவேண்டுமோ அப்படிச்செய்து பிறரிடத்திலும் காலந்தவறாமல் நடக்க வேண்டும். அன்றியும் நம்முடைய காரியங்களெல்லாம் ஒழுங்கும் கிரமமும் அமைந்திருக்கவேண்டும். எந்தக்காரியத்தைச் செய்தாலும் செம்மையாய்ச் செய்யவேண்டும்; செம்மையாய்ச்செய்ய ஒழுங்கின்றியமையாது. காலத்தை வீண்போக்காமல் காரியத்தை எளிதாயும் மனதுக்கு ரம்மியமாயும் கண்ணுக்கு லட்சணமாயும் செய்ய ஒழுங்கு மிகவும் தேவையானது. கண்ணுக்கு லட்சணமாயிராவிட்டாலென்னவென்றாலோ, அப்படியல்ல; விறகுதொட்டிகளில் கட்டைகளும் சுமைகளும் எப்படி பார்க்கவழங்காமல் அடுக்கியிருக்கின்றன பாருங்கள்; புகைவண்டி வேலைசெய்யும் இடங்

களில் எவ்வளவு அழகாய் சமமாயும் ஒரேமாதிரியுமான கும்பல்களாக வைத்திருக்கின்றன பாருங்கள். சென்னபட்டணத்துக் கோட்டையில் பீரங்கிகுண்டுகள் வைத்திருக்கும் ஒழுங்கை அநேகர் பார்த்திருக்கலாமே; அவைகள் கணிதசாஸ்திர நியாயங்களின்படி வைத்திருக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் எத்தனை இருக்கிறதென்று தெரிந்தால் மொத்தம் எத்தனையென்று சொல்லிப்போடலாம். ஒன்று குறைவாயிருந்தாலும் சட்டென்று பார்க்கும்போதே தெரியும். அப்படியின்றி கண்டது கண்டபடி இறைத்திருந்தால், எத்தனைபோயிற்று எத்தனைவந்தது என்றுகூட அறிவது பிரயாசை. இப்படியே பெரியகாரியங்களிலும் ஒழுங்கு உபயோகமாயிருக்குமென்று கண்டுகொள்ளலாம். இப்படியிருக்க நம்முடைய தேசத்தார் அநேகம்பேர் ஒழுங்கின் பயனை அறியாதவராய் அதைக் கவனிக்கிறதில்லை.

சுத்தம்.—உடம்பைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கும் விஷயத்தில் இந்துக்கள் மற்ற ஜாதியாரைவிடக் குறைந்தவர்களல்ல; மற்றவிஷயங்களிலோ குறைந்தவர்களென்பதற்குச் சந்தேகமில்லை. முக்கியமாய் சென்னைப்பிரதேசங்களில் வீடுகள் கட்டியிருக்கும்பிரகாரம் அசுத்தத்துக்கு ஏதுவாகிறது. வீட்டுக்குள் நுழைந்தால் ஓரிடத்தில் சாணிக்குவியலும், ஓரிடத்தில் அசுத்தமான அற்பவஸ்துக்களும், ஓரிடத்தில் மேட்டுப்பூச்சி நிறைந்த படுக்கையும், இவைகளின் நடுவில் சுத்தமான பதார்த்தங்களும் காணப்படுகின்றன. நம்மவர்களிடத்தில் உள்ளகுற்றம் என்னவென்றால், அசுத்தமாயிருக்கிறார்களென்பதல்ல; சுத்தத்தினால் உண்டாகும் நன்மைகளை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்; என்பதாம்.

இங்கே இன்னும் சில விஷயங்கள் கூட்டுகிறோம். ஒரு ஐரோப்பியன் வெகுநாள் விலகியிருந்து தன் சிநேகிதனுடைய குழந்தையைப்பார்த்தால், பையன் அழகாயிருக்கிறான், பையன் நல்லவளர்த்தி என்பான். இத்தேசத்தானோ அப்படிப்பட்ட தருணத்தில் என்ன பையன் இப்படி இளைத்துப்போயிருக்கிறானே; உடம்பு செம்மையில்லையாவென்ன என்பான். இருவரும் குழந்தையினுடைய க்ஷேமத்தைக் கருதுபவர்கள்தான்; ஆனால் வித்தியாசம் என்னவெனில், ஐரோப்பியனுடைய கொள்கை நன்மையைக் கோருதல், இந்துவினுடைய கொள்கை தீமையை விலக்கல். இதனால்தான் அவர்களுடைய பேச்சும் நடத்தையும் பேதப்படுகிறது. வந்தனம் என்றும், கடன்பட்டிருக்கிறேன் என்றும், விதேயன் என்றும், மன்னிக்கவேணுமென்றும் இப்படி நானாவிதச்சொற்கள் ஐரோப்பியர்களிடத்தில் வெகு சாதாரணம். நம்மவர்களுக்கு இந்தப் பேச்சுகள் சிநேகத்திற்குக் குறியல்லவென்று தோன்றும். இந்துக்கள் கால்செருப்பை வாங்குவது மரியாதைக்கு அடையாளம்; ஐரோப்பியர்கள் தலைப்பாகையை வாங்குவது மரியாதைக்கு அடையாளம். இந்த வித்தியாசம் அந்தந்த தேசத்துக் கொள்கைபேதத்தி

ஞல் உண்டாகிறது. ஐரோப்பிய நாகரிகத்தையடைய முயலும் சிறுவர்கள் நம்முடைய வழக்கத்தை விட்டுவிட்டு அவர்களைப்போல இருக்கப் பார்க்கிறார்கள். இது எப்படியிருக்கிறதெனில், வான்கோழியானது அன்னத்தின் நடையைக் கற்றுக்கொள்ள முயன்று தன்னுடைய இயல்பான நடையையும் போக்கடித்துக்கொண்டதுபோலும்.

நமக்கும் ஐரோப்பியர்களுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு; ஆயினும் எல்லாவற்றையும்விட பெரியவித்தியாசம் ஒன்று உண்டு. ஐரோப்பிய ஸ்திரீகளிருக்கும் நிலையும் நம்முடைய ஸ்திரீகளிருக்கும் நிலையும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயிருக்கிறது. நன்றாய் ஆராய்வோமானல், சம்சாரவிஷயங்களை நடத்துவதில் நம்முடைய ஸ்திரீகளே அதிக அதிகாரமுள்ளவர்களாயிருக்கிறார்களென்று தெரியவரும். விவாககாரியங்களில் ஸ்திரீசொல் அநேகமாய் மேலாயிருக்கிறதேதவிர, புருஷன்சொல் அவ்வளவு உதவுகிறதில்லை. இப்படியிருக்க, குறைவு என்னவெனில், வெளியில்வந்து தாராளமாய் சகலகாரியங்களிலும் கலந்துகொள்வதில்லை என்பது; இந்தக் குறைவும் சிலகாலத்தில் தீர்ந்துபோமென்று நம்புவதற்கு இடமுண்டு.

செஞ்சிக்கோட்டை.

இந்ததேசத்தின் பூர்வீக அரசர்களில் சிலர் மலைமதில்முதலிய அரண்களில் துருக்கமென்னும் மலைக்கோட்டையை மிக்க உறுதியுள்ளதாயும், அழகாயும், பார்ப்பவர்கள் அதிசயிக்கும்படியான சிற்பவேலைகள் அமைந்ததாயும், சத்துருக்கள் அஞ்சும்படியான அரணிப்புள்ளதாய்க் கட்டிக்கொண்டு பகைவருக்கஞ்சாமல் அரசுசெலுத்திவந்தார்கள். அத்துருக்கங்களில் ஒன்றாகிய செஞ்சிக்கோட்டை தென் இந்தியாவில் மிகப் பிரசித்திபெற்றது.

தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள இச்செஞ்சிக்கோட்டையில் ஒருவாறு அரசாண்ட தேசிங்குராஜனைப்பற்றி மிகவும் வியக்கத்தக்க கதைகளும் பாடல்களும் எழுதப்பட்டிருப்பினும், எல்லா ஜனங்களும் அறியும்படி அக்கோட்டையின் சிறப்பை விவரித்தெழுதினவர்கள் மிகவுஞ் சிலர். சென்ற மார்ச்சுமாதத்தில் நான் அங்குள்ள கோட்டைகொத்தளங்களைச் சுற்றிப்பார்க்க மிக விருப்பங்கொண்டு அவ்விடத்தில் சிலநாள் வசித்திருந்தேனுகையால் எனக்குத் தெரிந்தவளாயில் அக்கோட்டையைப்பற்றித் தெளிவாகச் சொல்லுகிறேன்:—

முறையே 250-அடி, 300-அடி உயரமுள்ள கிருஷ்ணகிரி ராஜகிரி என்று பெயர்பெற்ற இரண்டு குன்றுகள் சுமார் கால்மயில் அகலமுள்ள பள்ளத்தாக்கினுல் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ராஜகிரி என்பது

தேசிங்குராஜனுடைய வாசஸ்தலமாகவும், மற்றோர் குன்று அவன் ராஜநீகம் நடத்துமிடமாகவும் உபயோகிக்கப்பட்டன. ராஜகிரி குன்றில் ஏறிச் செல்லும் பாதை பரிசுத்தமாகவும், படிகள் பாறுங்கற்களால் கட்டப் பட்டுமிருக்கின்றன. குன்றில் முக்காற்பங்கு உயரம் ஏறிப்போனால் அவ்விடத்தில் தேசிங்குராஜனுக்குக் குலதெய்வம் என்று சொல்லப்படாநின்ற ஓர் துர்காவதியம்மன்கோயிலைக் காணலாம். அக்கோயிலுக்கு அருகாமையில் ஒரு பாறைச்சருவில் பெரிய சுனை ஒன்றுண்டு. அது சுமார் 200–சதுரடி பரப்புள்ளதாயிருக்கும். அதில் தேசிங்குராஜன் ஜலக்கிரீடைசெய்வது வழக்கமாம். அச்சுனையைச் சுற்றி உல்லாசமாய் உட்காரும்பொருட்டுச் சார்மணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைக் கடந்து மேற்சென்றால் மிக உன்னதமான குன்றின் சிகரம் ஒன்றுண்டு; அச்சிகரத்தின் உச்சி சற்றேறக்குறைய 50–அடி உயரமிருக்கும். அவ்விடத்திற்கு ஏறிச்செல்ல படிகள் கட்டப்பட்டிருக்கவில்லை. நூலேணிகள் வைத்து ஏறிப்போவது வழக்கமாகையால் நானும் அப்படியே ஏறிச் சென்றேன். அவ்விடம் தேசிங்குராஜன் வாழ்நாளில் அவன் ராணிக்கு அந்தப்புரமாயிருந்ததாம். அங்கு இப்பொழுது சுற்றுச்சுவரும் அஷ்டகோணவடிவாய் இரண்டு மண்டபங்களும் உருக்குலையாமலிருக்கின்றன. அம்மண்டபங்களைச் சுற்றிலும் அகழிபோல் மிகவும் ஆழமாய்க் கல்லில் குடையப்பட்டிருக்கிறது. மரப்பாலம்போட்டு அதன்வழியாய் அவ்வகழியைக் கடந்து மண்டபங்களைச் சேரவேணும். வாசயோக்கியமான அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கிற அம்மண்டபங்களில் எப்பொழுதும் கடுங்காற்று வீசுகின்றது. மண்டபங்களின்மேல் ஏறிச் சுற்றிலும் பார்த்தால் பூமி அதபபாதாளத்தில் அழிந்துவிட்டாற்போலவும், நான் ஆகாயத்தில் பறக்கிறதுபோலவும் தோன்றியதல்லாமல் சற்றுநேரத்தில் (Fascination of the precipice) கிறுகிறுப்பான மயக்கமும் உண்டாயிற்று.

இதுநிற்க, இக்குன்றின் அடிவாரம் 5 கோட்டை வாசற்படிகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாசற்படியிலும் போர்ச்சேவகர் வசிப்பதற்குத் தகுமான கட்டிடங்களும் இருக்கின்றன. அவைகளைக் கடந்து வெளியேவந்தால் குன்றுக்கெதிரில் தஞ்சாவூர் ஜில்லாவில் விளையும் நெல் முழுமையும் அடக்கும்படியான களஞ்சியங்களும், எண்ணெய் நெய்முதலிய வஸ்துக்கள் வைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் கிணறுகளும், போர்வீரர் கஸரத்செய்வதற்கான கரடிகூடங்களும், துலுக்கருடைய மசூதியும், ஓர் சரவதோபத்திரமண்டபமும், குதிரைலாயங்களும் கொஞ்சமென்கிலும் சேதப்படாமலிருக்கின்றன. இக்குன்றுக்கும் கிருஷ்ணகிரிக்கும் நடுவில் 100–அடி உயரமும், 20–அடி அகலமுமுள்ள ஒரு பெரிய சுவர் கட்டப்பட்டிருக்கிறது. அச்சுவர்மேல் தேசிங்குராஜன் குதிரைசவாரி செய்துவந்ததாகச் சொல்லுகிறார்கள்.

கிருஷ்ணகிரி என்னும் குன்றின் உச்சிக்கு இரண்டு வழிகளுண்டு. ஜனங்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஓர் வழியும், போர்ச்சேவகர்களுக்கு மிகவும் செங்குத்தான படிகளால் அமைக்கப்பட்ட மற்றோர்வழியுமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இக்குன்றின் உச்சியில் அரசன் மந்திராலோசனைச்சபை கூடுகிற ஓர் மண்டபத்தைக் கண்டேன்; அதில் மந்திரிகள் உட்காருவதற்குச் சார்மனைகளும், கட்டிடத்தின் மத்தியில் அரசனுக்கு ஓர் கல்லூஞ்சலும் போடப்பட்டிருக்கிறது. இக்கல்லூஞ்சல் செய்யப்பட்டிருக்கும் வேலைத்திறமையை நான் எவ்விதமென்று புகலுவேன். சங்கிலி மாட்டுவதற்கு இரண்டு வளையங்கள் கல்லிலேயே செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்துச் சிற்பசாஸ்திரிகள் அவ்விதமான வளையங்களை மிகச் சிரமத்துடன் செய்தாலும் நான் பார்த்த அவ்வளவு பெரிதாயும் அழகாயும் இப்பொழுது செய்வது மிக அருமையென்று நினைக்கிறேன்.

தேசிங்குராஜன் தன்னிடத்தில் ஊழியஞ்செய்தவர்களுக்கு உண்டிக்குரிய பதார்த்தங்களைச் கூலிகொடுத்துவந்ததாகத் தோற்றுகிறது. அப்படிக்கில்லாவிடில் நெற்களஞ்சியங்களும், நெய், எண்ணெய் கிணறுகளும் இக்குன்றின் உச்சியிலும் காணப்படுவதற்கு ஏது என்ன?

கிருஷ்ணகிரிக்கடுத்த வடக்குத்திசையில் ரங்கநாதகிரி என்று ஒரு மூன்றாங் குன்றுமிருக்கிறது 200—அடி உயரமுள்ள அக்குன்றின் உச்சியில் ஸ்ரீரங்கநாதருடைய கோயில் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் பள்ளி கொண்டிருக்கிற ரங்கநாதர் தேசிங்குராஜனுக்குப் பிரத்தியக்ஷ தெய்வமாம். ஆற்காட் நபாப் படையெடுத்துச் செஞ்சிக்கோட்டையைச் சமீபித்துவந்து தேசிங்குராஜனைப் போருக்கழைத்தபோது, அவ்விராஜன் சண்டைக்குப்போக ரங்கநாதரை அனுமதி கேட்டதாயும், அவர் இன்றைக் கிருந்து நாளைப்போனால் உனக்கு ஜெயமுண்டாகுமென்று கட்டளையிட்ட உடன் தேசிங்கு மிகவும் மனநொந்து சுவாமிபேரில் அதிக நிஷ்டூரப் பட்டதாயும், அதற்குப் பெருமாள் ஒன்றும்பேசாமல் தன் முகத்தைச் சுவர்ப்புறமாகிய மேற்குத்திசையில் திருப்பிக்கொண்டதாயும் சொல்லுகிறார்கள். பிம்பமும் முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்கிறது. இக்கோயிலில் வேறுவிசேஷங்களும் உண்டு; முன்பிராகாரத்தில் ஓர் நந்தியாவட்டச்செடியும் மற்றோர் எலுமிச்சஞ்செடியும் இருக்கின்றன: அவையிரண்டும் நாள்தோறும் குறைந்தது முறையேஒரு புஷ்பமும் பழமும் சுவாமியின் பூஜைக்குக் கொடுத்துவருவதாகச் சொல்லுகிறார்கள். நான் அவ்விடஞ்சென்ற தினங்களிலெல்லாம் அப்படியேயிருக்கக்கண்டேன். இவையன்றி அதிக ஆழமான ஓர் ஜ—னையிருக்கிறது; அதன் ஜலத்தைக்கொண்டுதான் சுவாமிக்கு அபிஷேகம்முதலானதும் செய்துவருகிறார்கள். பனிநீர்க்கட்டி போல் குளிர்ச்சியுள்ளதாயிருக்கிற அச்சுனையின் ஜலம் எக்காலத்திலும் வற்றுகிறதேயில்லை.

ராஜகிரி கிருஷ்ணகிரி என்னும் இரண்டு குன்றுகளின்மேலும் அவைகளைச் சுற்றிலும் இடிந்துபோன கோட்டைச்சுவரும், தூர்ந்துபோன அகழியும் காணப்படுகின்றன. இக்குன்றுகளிலும் அவைகளின் அடிவாரங்களிலும் விசேஷமாய் மனிதசஞ்சாரமில்லாமையால், அவ்விடங்களில் புலிகளும், கரடிகளும், மயில்களும், மான்களும், குரங்குகளும் ஏராளமாய்க் குடியேறியிருக்கின்றன. தேசிங்குராஜன் அரசாண்டகாலத்தில் செஞ்சிபட்டணம் என்பது எப்படியிருந்ததோ அதைப்பற்றி நமக்கு யாதொன்றுந் தெரியாது. இப்பொழுது வேளாளர்களுடைய விழல்வேய்ந்த சிறுவீடுகளடங்கிய ஒரு குக்கிராமமாயிருப்பதை நாமெல்லோரும் பார்க்கலாம். இங்கிலீஷ் துரைத்தனத்தார் செஞ்சிக்கோட்டையை முக்கிய ராணுவஸ்தானமாக்கி, இப்பொழுது பல்லாவரம், பரங்கிமலைமுதலான இடங்களிலுள்ள சைன்னியங்களை அவ்விடத்திற்கு அனுப்புவார்களாயின் போர்வீரர்களின் சவுக்கியத்திற்கும் பந்தோபஸ்துக்கும் மிக நலமாயிருக்கும்.

கைப்பதட்டம் வாய்ப்பதட்டம்.

கல்வியினாலும், கைத்தொழில்களினாலும், இன்னும் வேறுகாரணங்களினாலும், கொலைகளவுமுதலான பெருங்குற்றங்கள் நாளுக்குநாள் குறைந்துவருகையில், தாழ்ந்தஜாதிகளில் ஒருவகையான குற்றமாத்திரம் இக்காலத்தில் அதிகரித்துவருவதைப் பார்க்க மனதிற்கு வருத்தமாயிருக்கிறது. அதாவது, கைப்பதட்டம் வாய்ப்பதட்டம் என்பவைதான். முற்காலத்திலும் குடிமயக்கத்தால் கூச்சவிடுகிறதும் திட்டுகிறதும் கிட்டினவர்களைக் கையால் தட்டுகிறதும் உண்டு. இப்போது தெருக்களில் அச்சமில்லாமல் கேட்பவர் மனம் அருவருக்கத்தக்க அசங்கியமான துர்பாஷைகளைச் சாதாரணமாய்ப் பேசுகிறார்கள். கைகளினாற் சுட்டி அகந்தையும் செய்கிறார்கள். இது பட்டணங்களில்தான் மிகுதியாயிருக்கிறது. நாட்டுப்புறங்களில் இப்படிக் காண்பதரிது. இதைப் போலீசு விசாரணைக்கர்த்தாக்களால் விலக்கக்கூடுமேயன்றி மற்றவர்களால் விலக்கக்கூடியதல்ல. மேலும் இக்காலத்தில் பாடசாலைப் புத்தகங்களில் பெண்ணவயவவர்ணனையிருந்தால் அந்தப் பாட்டைத் தள்ளிவிடவேண்டுமென்கிற நிபந்தனையுண்டாயிருக்கிறது. பாடசாலைப் பிள்ளைகள் வீதியில் போகையில் அவர்கள் காதுகளில் விழுகிற மனங்கலங்கத்தக்க துர்பாஷைகள் பட்டணங்களில் அதிகம்.

இப்பொழுது குடிவெறியால் வைதலும் கைநீண்டுதலும் மேன் மேலும் அதிகரித்து ஜனங்களுக்கு நடுக்கமுண்டாகும்படி குரூர காரியங்களாய் முடிகிறது. புருஷன் ஸ்திரியை அற்ப குற்றத்திற் காக தடியாலும் நேர்ப்பட்ட மற்றெதினாலாவது அடித்து, கீழே விழுந்தால் புரட்டிப்புரட்டி யுதைத்தல் சாதாரணமாய் இழி ஜனர்களில் நடக்கிறது. காரணமில்லாமலும் வேடிக்கையாகவும் இப்படிச் செய்கிறார்கள். அங்கவீனப்பட்டால் அதைக்குறித்துச் சிரிப்பும் நகைப்பும் உண்டாகிறது. காரியம் இப்படியிருக்க, போலீசு நியாயாதிபதிகளும் உத்தியோகஸ்தர்களும் இக்குற்றங்களைச் சொல்பமாக நினைத்து நடத்துவது மிகவும் ஆச்சரியம்!

இருபது ரூபாய் திருடினவனுக்குக் கசையடி, கைதொழு, கால் தொழு, வெகுநாள் காவலிலிருத்தல் பூர்வத்திலுண்டு. இப்பொ ழுது வாழ்நாளெல்லாம் உபயோகப்படத்தக்க பெரும்பொருளா . அவயவத்தை ஊனப்படுத்தினால், சொல்பகாலம் சிறையில்வைத்து அவனுக்குக் கிடைத்தற்கரிய நல்ல சாப்பாடுபோட்டு, பிரவர்த்திக் குச் சதுரக்கள்ளிப்பாலில் கேழ்வரகு மாவைப்போட்டுப் பிசைந்து தின்று, பேதியானபின் கூழ்குடிக்கிறவனுக்கும் பச்சை நேர்வாள மாத்திரை தின்கிறவனுக்கும் விலையுயர்ந்த சீர்மைமருந்துகொடுத்து உள்ள வியாதியையுந்தீர்த்து அனுப்பிவிடுதலினால் அச்சிறையிரு ப்பு சிக்ஷையாகத் தோன்றாமல் இலாபமாகவே தோன்றுகிறது. மறு படி இந்தச் சிறையிருப்பு எப்போ கிடைக்குமென்கிற இச்சை யோடு போகிறான். பொருள் அபகரித்தலுக்கு விதித்திருக்கிற சிக்ஷை அதிகமும் அவயவங்களை வருத்திப் பழுதுபடுத்துவதற்குச் சொலபமும் தகாது. உயிரும் உடலும் பெரும்பொருள், இவை களைப் பற்றின பாத்தியதையே மேற்பட்டது. நாகரீகமில்லாத காட்டுவேடர் குறவர் மறவரல்லவோ ஒருவரையொருவர் வருத்தி ஜீவிக்கிறார்கள்.

உதாரணம்:—குற்றமற்ற ஒரு விருத்தனும் விருத்தையும் சும்மா வீட்டில் உட்காந்திருக்கையில், மிருகத்தன்மையுள்ள மூன்று மனிதர்கள் உள்ளே புகுந்து, அவர்களிருவரையும் அடித்து விருத் தன் கண்களில் ஒன்றை இரத்தம்வடிய ஊனப்படுத்தி, அதில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்தான்; இது எவ்வளவு குரூரமான காரியம்.

மற்றொருவன் தன் மனைவியோடு வீதியில் செல்லுகையில் நிஷ்காரணமாய் மேல்விழுந்து அடித்துக் கீழேதள்ளி சாகிறவனாயில் உதைத்தனர். கண்டதையெல்லாம் எழுதினால் குற்றஜாபிதா பெருகும். படிப்பேறினால்தான் இத்தீமைகள் விலகும். சிக்ஷைகளால் ஒழியாவென்று ஒரு நியாயாதிபதி சொன்னார்.

சற்று முற்காலத்தில் பட்டணத்துத் தெருக்களிலும் வெளியிடங்களிலும் சாதாரண குடிகள் பிள்ளைகள் கோலி, குண்டு, கோட்டுப்புள், கச்சைக்காய்முதலிய கொண்டு பந்தயம்கட்டித் துஷ்டவிளையாட்டு விளையாடுகையில் டாணாகாரன் அல்லது தலையாரி வருகிறதைப்பார்த்தாலும் வருகிறதாக ஒருவர் சொல்லக்கேட்டாலும் கலைந்தோடிப்போவார்கள். இப்போது போலீசுசேவகன் வந்தால் அவன் நம்மை என்னசெய்யக்கூடுமென்று ஆடிக்கொண்டும் துர்பாஷைகள் பேசிக்கொண்டும் சண்டைசெய்துகொண்டுமிருக்கிறார்கள். அவ்வழிவந்த சேவகர்களும் அதைக் கவனியாமல் சும்மாய்ப் போய்விடுகிறார்கள்.

சமாசாரம்.

இந்திய துரைத்தனத்தாருக்கும் பர்மா அரசனுக்கும் பிணக்கு.—பர்மா வழியாய்ச் சீனாவுக்கு அனுப்பப்பட்ட அங்கிலேய ஸ்தானாபதியாகிய கர்னல் ப்ரௌன் என்பவரைப் பிரமதுரைத்தனத்தாரால் ஏவப்பட்ட சீனசேனைகள் தடுத்ததையும், மார்கரி துரையைக் கொலைசெய்ததையுங்குறித்து நிச்சயமான செய்தி நம்பப்படத்தக்கவழியாய் இந்திய துரைத்தனத்தாருக்குக் கிடைத்தபடியினாலே, அரசனிடத்திற்குப் போயிருக்கிற ஸ்ரீ டக்லஸ் போர்ஸித் துரை கரெனிப்பிரதேசத்தின் எல்லையைப்பற்றி உண்டான பிணக்கை விசாரிக்குமுன் இதையே விசாரித்துத் தெரிவிக்கும்படி கட்டளைபெற்றார். அங்கிலேய ஸ்தானாபத்தியத்தை விரோதிக்க எழும்பின சீனசத்துருக்களைப் பிரமஅரசன் மூட்டினானென்பது நிச்சயம். ஆதலால், இந்தியதுரைத்தனத்தார் இதையே விசாரிப்பது அவசியம். காரியத்திற்குத் தகுதியான சாட்சி உண்டானால், அங்கிலேயருக்கும் பிரம அரசனுக்கும் யுத்தம் உண்டாகும். இதைத்தொட்டுப் பற்பல சப்தங்கள் பிறந்தன.

மஹாராஜாத்தியவர்கள் அந்தியமுனையைப் பார்க்கச் சென்றது.—பூகோளத்தின் அந்தியமுனையாகிய துருவமுனையைச்சேர்ந்த சமுத்திரத்தைப் பார்க்கும்படி சீமையிலிருந்து சில வித்துவான்கள் மஹாராஜாத்தியவர்களின் கப்பலிரண்டில் ஏறிப் புறப்பட்டார்கள். அந்தத் துரைமார்களோடே போன கப்பற்காரர் சுமார் 125–பெயர். அவர்கள் பண்ணவேண்டிய பயணம் இரண்டுவருஷமோ மூன்றுவருஷமோ எவ்வளவோ தெரியாது. அவர்கள் வடக்கே போய்ச் சமுத்திரம் உறைந்துபோகும்பொழுது, கப்பல்கள் ஓடாமல் சில மாசமட்டும் கற்போன்ற கடல்முகத்தில் நிற்கும். குளிர் அதிகமாயிருக்கும். ஆனபடியால், உஷ்ணத்துக்குத்தக்க உடை உடுத்திக்கொண்டு கப்பலுக்குள்ளே இருக்கவேண்டும். கூடியதாயிருக்குமிடத்தில், உறைநீர் முகத்தில் ஓடும் நாய்கள் கட்டிய வாகனங்களிலேறி கப்பல்நிற்கும் நிலைக்கு அப்புறத்தில் உள்ள கடல்முகத்தைச் சோதிப்பார்கள். சில இடங்களில் கரை இருக்கவுங்கூடும். சிலர் உத்தேசிக்கிறபடி, துருவமுனையைச்சேர்ந்த கடல் உறையாமல் நீர்த்தன்மையாயுமிருக்கும். எப்படியோ தெரியாது. எப்படியானாலும், கப்பற்காரரும் வித்துவான்களும் கூடியஅளவும் இருக்கிறதைப் பார்க்கும்படி நாயால் இழுக்கப்படும் உறைநீர்வாகனத்திற் போவார்கள். ஒருவேளை துருவமுனையைக் கண்டுகொள்ளவும் கூடும். ஆறுமாசமட்டும் சூரியவெளிச்சம் அவர்களுக்கு இராது; தீபம் ஏற்றி வேண்டிய வேலைகளைக் கப்பலிலே செய்வார்கள். ஒவ்வொரு கப்பலுக்கும் குரு ஒருவர் இருக்கிறார். வாசிக்கத்தக்கதாக விதம்விதமான அநேக புஸ்தகம் வைத்திருப்பார்கள். போன கப்பற்காரரில் அநேகர் கீதவாத்தியக்காரரானபடியினாலே, இனிமையாய்க் காலக்ஷேபம்செய்வதற்கு வழி உண்டாகும்.

இந்தியா ஸிவில் உத்தியோகஸ்தர்.—இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலைச் சங்கத்தார் அந்தக் கல்விச்சாலையில் இந்திய ஸிவில் உத்தியோகத்திற்குத்தக்க கல்விகற்பிப்பதற்கு ஏற்பாடுசெய்யத் தீர்மானித்தார்கள். அதைக்குறித்து அச்சங்கத்தைச்சேர்ந்த பிரதானிகள் இந்திய மந்திரிக்குக் கடிதம்போக்கினார்கள். இந்தியாவிற்கு உத்தியோகஞ்செய்யவர அபிப்பிராயங்கொண்டிருக்கிற துரைமக்கள் இந்தியாவுக்கு வருவதற்குமுன் ஆக்ஸ்போர்ட் கல்விச்சாலையில் கல்விகற்றுக்கொண்டால் எல்லாவிதத்திலும் நலமாம்.

THE CHINESE RICE PAPER PLANT.

சீனுகாகிதம் செய்ய உதவும் செடி.